27
4552
CONNEMARA PUBLIC LIBRARY
29 MAY 1955
MADRAS

கைத்தறி

ஆசிரியர்: எம். கே. சாமி.

மாதப் பத்திரிகை | விலை 4 அணா

தறி 3	கோவை, 15—8—1952.	பாவு 10

சந்தா விகிதம்:

ஆண்டு சந்தா ரூ. 3.
தனிப் பிரதி அணா நான்கு.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் நான்கு அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு முன் பணம் கட்டும்

ஏஜண்டுகளே தேவை.

"கைத்தறி" காரியாலயம்,
முத்தண்ணன் குளம் வீதி,
கோவை.

நூல் விநியோகக் கட்டுப்பாடு தற்காலீக ரத்து, விலை உயர்வுக்கே வழி வகுத்துள்ளது!

கடந்த மாதம், முதற்கொண்டு நூல் விநியோகக் கட்டுப்பாட்டை-பங்கீட்டு முறையை சென்னை சர்க்கார் மூன்று மாதகாலத்திற்கு தற்காலீகமாக ரத்து செய்துவிட்டிருக்கின்றனர். ரத்து செய்யப்பட்டபோது, இதனால் கைத்தறி நெசவாளி தன் தொழில் தேவைக்கான நூலை தங்குதடையின்றி தாராளமாகப் பெற்றுக் கொள்ள வாய்ப்பேற் படுத்தி விட்டதாகச் சொல்லப்பட்டது.

இது போன்ற காரணங்கள் எவ்வளவு அபத்தமானது என்பதை சென்றஇதழிலேயே நாம் எடுத்துக் காட்டியிருந்தோம். இருப்பினும் இன்று இந்தத் தற்காலீக உத்திரவானது எந்தஅளவிற்கு நெசவாளிகளைப் பாப்பராக்கிவருகிறது யென்பதைப்பார்க்கும்போது ஒருமுறையான மாற்றுத்திட்டத்தை அமல் நடத்தும்படி நாம் சர்க்காரை வற்புறுத்தியாக வேண்டியிருக்கிறது.

அத்துடன் கள்ள வர்த்தகத்தில் கைதேர்ந்தவர்கள், இந்த நூல் பங்கீடு ரத்து உத்திரவைத் தங்களுக்கு ராஜாஜி சர்க்கார் அளித்த வரப்பிரசாதமெனக்கருதி இதை நிரந்தரமாக்க வேண்டுமென வேறு கோருகின்றனர். சர்க்காருக்கு அவர்கள் மகஜர்கள் சமர்ப்பிக்கின்றனர். அவர்களது குரல், இன்று சர்க்காருக்கு நன்கு எட்டும்படியான முறையில் கட்டுப்பாடானபிரசாரமும், செய்யப்பட்டு வருகின்றது.

இந்தசந்தர்ப்பத்தில் சர்க்கார் மிகக் கவனமாக இருந்து கள்ளச் சந்தையாளர்களின் கூக்குரலுக்கு செவிமடுக்காமல் இருக்கவேண்டுவது மிக அவசியமாகும் என்பதையும் ராஜ்ய நெசவாளர்கள் எடுத்துக் காட்டியாக வேண்டியிருக்கிறது.

எந்த சந்தர்ப்பத்தில் நூல் விநியோகம் ரத்தாக்கப்பட்டது?

கைத்தறி ஜவுளி எங்கும் விற்காமல் தேங்கிக் கிடக்கும் நிலையிலேதான் நூல் விநியோக திட்டம் தற்காலீகமாக ரத்து செய்யப்பட்டது. மேலும் துணித்தேக்கத்தால் மில்களில் உற்பத்தியான நூல் நெசவாளர்களால் வாங்கமுடியாதபோது, சர்க்காரின் நிர்ணயவிலையான மில்வாசல் விலைக்கும் குறைவான விலைக்கு எல்லா நெம்பர் நூலும் விற்கப்பட்டு வந்த சந்தர்ப்பத்தில்தான் இந்த ரத்து உத்திரவு வந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக மத்தியசர்க்கார், தேங்கியுள்ள கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்து அவதியுறும் நெசவாளர்களுக்கு விமோசனம் தேடித்தர முயற்சி செய்யாது, மில் முதலாளிகளை நஷ்டத்தினின்றும் பாதுகாக்க-அவர்களின் நூலைதாராள ஏற்றுமதிக்கு அனுமதித்த வேளையில்தான் ராஜ்ய சர்க்கார் அர்த்தமில்லாது இந்த நூல் விநியோக ஏற்பாட்டை தாற்காலீகமாக ரத்து செய்தது என்பதையும் நாம் உணர வேண்டும்.

தவிர, எங்கும் ஏற்பட்டுவிட்ட துணித்தேக்க நெருக்கடி, ராஜ்ய சர்க்காரைத் திக்கு முக்காடச்

செய்து ராஜாஜி உள்ளிட்ட எல்லா மந்திரிகளும் கைத்தறித் துணியையே மக்கள் வாங்கி ஆதரிக்கும்படி வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருக்கும் நேரத்திலேயே தான், கைத்தறி நெசவாளர்களுக்குத் துரோகம் இழைக்கும் இவ்வுத்திரவு போடப்படுகிறது.

யதார்த்த மான நிலைமைகள் கண் முன் சாதமாகக் காட்சியளிக்காமல் இருக்கும்போது, அவசியமற்ற இந்த உத்திரவு ஏன் போடப்பட்டது என்பதற்கு சம்பந்தப் பட்டவர்கள் நிச்சயம் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

தப்புக்கணக்கு !

உணவுப் பங்கீட்டை ரத்து செய்ததின் மூலம் தப்போ, சரியோ மக்கள் வரவேற்றதைப் போல, இந்த நூல் விநியோகக் கட்டுப் பாட்டையும் நீக்கிவிட்டால் நெசவாளர்கள், கைத்தறி ஜவுளி வர்த்தகர்கள், மாஸ்டர் வீவர்கள் எல்லோருமே வரவேற்றுவிடுவார்கள் என்ற தப்பான எண்ணமே இந்தத் தற்காலீக பங்கீடு ரத்து உத்திரவுக்கு அடிப்படையாக இருந்திருக்கவேண்டுமென நம்புகிறோம்.

இல்லையெனில் வேறு எவ்வித மான சுமுகமான சூழ்நிலையும் பிறக்காதபோது, அவசியமற்ற இவ்வுத்திரவு ஏன் போடப்பட்டது என்பதுதான் புரியாத ரகசியமாக இருக்கிறது.

விளைவு; விலையேற்றம்.

இந்த தப்பான பார்வை-விளைவு விலையிறங்கிக் கொண்டிருந்த நூலுக்கு விலையேற்றப் பரிசைக் கொடுத்திருக்கிறது.

எங்கும் வாங்குவாரற்றுத் தேங்கிக் கிடந்த நூல், இன்று கள்ளச்சந்தைக்குகுடிபோய்விட்டது. எல்லா நெம்பர் நூல்களுமே நிர்ணய விலைக்கு மேல் 10 ராத்தல் கட்டு ஒன்றுக்கு ரூ. 4 லிருந்து ரூ. 10 வரை அதிகம் கொடுத்தால்தான் இன்று கிடைப்பதாக நமக்கு வரும் தகவல்கள் அறிவிக்கின்றன.

ராஜாஜி சர்க்கார் மீது பூரண நம்பிக்கை தெரிவித்த நெசவாளர் சங்கங்கள் கூட இன்று பகிரங்கமாக இவ்வுத்திரவைக் கண்டித்துத் தீர்மானங்களை நிறைவேற்றுகின்றன.

மில் வாசல் விலைக்குமேல் சில்லரை வியாபாரியின் லாபம் சேர்த்த நியாய விலைக்கு நூல் கிடைப்பதில்லை என்றும், கீழ்க்கண்டவாறு அதிகமான விலையே மார்க்கெட்டில் கோரப் படுவதாகவும் நெசவாளர்களால் சொல்லப்படுகிறது.

நூல்நெ. 10ராத்தல்	மில்வாசல் விலை.	மார்க் கெட்விலை
10	12–11–0	18–4–0
2/10	13–15–6	20–4–0
20	16—9–0	20–8–0
26	19—8–6	23–8–0
28	19–12–6	24–8–0
36	22—7–0	29–8–0
40	23 – 8–0	33–4–0
60	45–10–0	56–0–0
100	79–12–0	102–0–0

இப்படி விலையுயர்ந்து கொண்டேபோயிருக்கிறது என்பதுமட்டுமல்ல, சத்திரப்பட்டியிலிருந்து வந்துள்ள ஒரு செய்தி "26 நெ. நூல் 10 ராத்தல் கட்டு ரூ. 21 முதல் ரூ. 22 வரை கொடுத்தால் தாராளமாய் கிடைத்து வந்தது. பங்கீடு ரத்துக்குப்பின்பு அதேநூல் கட்டு ரூ.24 கொடுத்தாலும் அகப்படுவதில்லை"யென்று கூறுகிறது.

ஈரோடு கைத்தறி நெசவாளர் சங்கம் இந்நூல் விலையுயர்வால் நெசவாளர்கள் எவ்விதம் பாதித்து விட்டிருக்கின்றனர் என்பதை படம்பிடித்துகாட்டியுள்ளசெய்தி இதே இதழில் வேறுஓர் பகுதியில் பிரசுரிக்க பட்டுமிருக்கிறது.

கோவை நெசவாளர்கள் 100 நெ. நூலுக்கு கள்ளச்சந்தையை நாடிப் பிழைப்பு நடத்த வேண்டிய அவசியத்திற்குஇவ்வுத்திரவு கொண்டுவந்து விட்டிருக்கிறது.

100 நெ. நூல் நூறகும் பல மில்கள், தங்களது நூலை நேரடியாக தங்களின்சில்லரை விற்பனைடிப்போக்கள் மூலம் நெசவாளர்களுக்கு விநியோகிப்பதில்லை யென்றும், தங்களுக்கு வேண்டப் பட்டவர்கள்மூலமே நெசவாளர்களுக்கு அதிக விலைக்கு 100 நெ. நூலை விற்பதாகவும் கூறப்படுகிறது!

கூலியும் இல்லை; துணியும் விற்பதில்லை!

அதிக விலை கொடுத்து நூலை வாங்கிநெய்தாலும் அடக்க விலைக்குக்கூட துணி விற்பதில்லை. இதனால் நெசவாளர்களது பட்டினி வாழ்வு தொடர்ந்து நடைபெறுகிறதே தவிர, இவ்வுத்திரவால் வேறு எவ்வித புதிய மாற்றத்தையும் ஏற்படுத்திவிட முடியவில்லை யென்பது தெளிவு.

ஏற்கனவேயுள்ள நூலின் நிர்ணவிலையே அதிகம் என்பது ஒரு தலை. இதை ராஜ்ய சர்க்காரும உணர்ந்தே நூலின் நிர்ணய விலையைக்குறைக்குமாறு மத்ய சர்க்காருக்கு வேண்டுகோளும் விடுத்திருக்கின்றனர். இந்த நிலையில், நூல் நிர்ணய விலைக்கும் மேல் விற்றால் எப்படி நெசவாளியர்ல் தொழில்செய் துஜீவிக்கமுடியும்?

தொடர்ந்து நடைபெற்றுவரும் நெசவாளியின் பஞ்சை வாழ்வுக்கு எவ்விதத்திலும் உதவ முடியாத இவ்வுத்திரவு மேலும் நீடிக்கக்கூடாது என்பதே ராஜ்ய நெசவாள்ர்களின் ஏகோபித்த அபிப்பிராயமாகும்.

நெசவாளர் கூட்டுறவு இயக்கமும் பாதித்துள்ளது.

விநியோகக் கட்டுப்பாடு நீக்கப்பட்ட பின் பெரும் அளவில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பாதித்து விட்டிருக்கின்றன என தெரிய வருகிறது.

ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்கம் தரும் நூல், நெசவாளர்களுக்கு ஒரு வார வேலைக்குக் கூடப்போதுமானதாக இல்லை. ஆகவே, அதன் நிர்வாகஸ்தர்கள் வெளி மார்க்கெட்டிலாவது நூலை வாங்கித் தனது மெம்பர்களுக்குக் கொடுத்து வேலை தந்து உதவலாமென்றாலோ சட்டரீதியாக வாங்கித் தொழில் செய்ய முடியாது தவிக்கின்றனர்.

இப்படியாகப் பல வழிகளிலும் இந்த தற்காலிக ரத்து உத்திரவு சகல பகுதி நெசவாளர்களையும் பாதித்திருக்கிறது என்பதை நாம் ராஜ்ய சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவருகிறோம்.

வியாபாரிகளையும் பாதிக்கிறது!

கைத்தறி ஜவுளி வர்த்தகர்களையும் இவ்வுத்திரவு மிகப் பெரிய அளவிலேயே பாதித்திருக்கிறது. ஏற்கனவே விலையேற்றக் காலத்தில் அவர்கள் கைத்தறித் துணி வர்த்தகத்தை நன்கு நடத்தி வந்தபோது திடீரென விலையிறங்கியது. அதில் அவர்களில் பெரும்பாலோர் பெற்றிருக்கும் "அடி" இன்னும் பல ஆண்டுகளுக்கு வியாபாரம் செய்து சம்பாதித்தால் தான் சரிக்கட்ட முடியும்.

அப்படிப்பட்ட நிலையில் நூல் விலையேற்றத்தால் அவர்கள் ஏறிய அளவில் கைத்தறித்துணியைக் கொள்முதல் செய்ய அஞ்சி தங்களின் தேவைகளுக்கும் குறைவாகவே கொள்முதல் செய்து வருகின்றனர்.

ஏனெனில்; நிச்சயமில்லாத ஒரு டெக்ஸ்டைல் கொள்கையின் பயனை அவர்கள் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து அனுபவித்து வந்துவிட்டார்கள். மீண்டும் மீண்டும் அச்சோதனைக்கு அவர்கள் பலியாக தயாராக இல்லை.

கைத்தறி ஜவுளி வர்த்தகர்கள் உள்ளத்தில் இவ்வுத்திரவு பீதியையே உண்டாக்கியிருக்கிறது. எவ்வித உற்சாகத்தையும் ஏற்படுத்தவில்லையென்பது தெளிவு.

கொள்கையில் ஒருமைப்பாடு அவசியம்.

இப்படிப்பட்ட திடீர் மாற்றங்கள் ஒரு நிச்சயமான கொள்கையின் மீது பிறக்கவேண்டுமேயல்லாது மத்திய சர்க்காருக்கும், மாகாண சர்க்காருக்கும் சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஒன்றுக்கொன்று வெவ்வேறுவித விளைவுகளை உண்டாக்கும் உத்திரவுகள் போடுவது ராஜ்ய நெசவாளர்களுக்கோ, தொழிலுக்கோ, வர்த்தகத்திற்கோ நிச்சயம் நன்மையை அளிக்காது என்பதை சர்க்கார் உணரவேண்டும்.

ராஜ்ய சர்க்கார் நூல் பங்கீட்டை தற்காலிகமாக ரத்துசெய்து உத்திரவு பிறப்பிக்கும் போது இவர்கள் நம்புகிறார்கள்; நெசவாளர்களுக்கு நியாயமான விலைக்கு வேண்டிய அளவுக்குத் தொழில் செய்ய நூல் கிடைக்கும் என்று.

ஆனால், மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காரைக் கலந்து கொள்ளாமல், வெளி நாட்டு ஏற்றுமதிக்கு நூல் ஏற்றுமதி செய்ய அனுமதித்து உத்திரவிடுகின்றனர்; இந்த ராஜ்ய கைத்தறி நெசவாளர்களைத் தங்களது உத்திரவு பாதிக்குமா என்பதைக் கூட உணர்ந்து பார்க்காது.

இப்படிப் பரஸ்பரம் தொடர்ந்து நடைபெற்றுவரும் முரண்பாடுகளை ரஜ்ய சர்க்காரின் அமைச்சர்கள் சட்டசபை விவாத காலங்களில் ஒப்புக் கொண்டுமிருக்கின்றனர்.

நூலுக்கு விலை நிர்ணயமாகட்டும், வெளி நாட்டு ஏற்றுமதிக்கு அனுமதிப்பதாகட்டும். இந்திய நூல் உற்பத்தியில் பிரதான்யம் வகிக்கும் இம்மாகாண சர்க்காரையும், மத்ய சர்க்கார் கலந்து முடிவுக்கு வருவதில்லையென்பதைப் பகிரங்கமாக ராஜ்ய தொழிலமைச்சர் ஸ்ரீ கிருஷ்ண ராவ் அவர்கள் சட்டசபையில் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இந்த ராஜ்ய நெசவாளர்களையும், அவர்களது தொழிலையும் நிலைக்களனாக வைத்து முடிவு செய்யாத எந்தக் கொள்கையும் நிச்சயம் கைத்தறி நெசவாளர்களைப் பாதிக்கத்தான் செய்யும். அதே காலத்தில் அம்முடிவுகள் மில் முதலாளிக்கு சாதகமாகவும் அவர்களுக்கு உற்சாக மூட்டுவதாகவும் இருக்கும் என்பது இன்றையவரை யேற்பட்டுள்ள ஒவ்வொரு முடிவுகளும் நிதர்சனமாக சாட்சியமளிக்கின்றன.

எனவே, மத்தியசர்க்கார் நூல் விலை நிர்ணயம், ஏற்றுமதி போன்ற முக்கியமான விஷயங்களில் நம் ராஜ்ய சர்க்காரை நிச்சயம் கலந்து முடிவு செய்தேயாக வேண்டும். மேலும், காப்பு வரி போர்டுபோன்ற ஸ்தாபனங்களில் இந்த ராஜ்ய கைத்தறி நெசவாளர்களின் உண்மைப் பிரதிநிதிகளுக்கும் இடம் இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். தவிர, மேற்படி காப்புவரி போர்டின் முடிவுகள் அனைத்துமே அகில இந்திய கைத்தறி போர்டின் முடிவுகளையும், சிபார்சுகளையும் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டுமேயல்லாது, அதற்கென வகுத்துக்

[6-ம் பக்கம் பார்க்க]

கண்ணைக் கவரும்
* எண்ணற்ற *
கைத்தறி ஜவுளி ரகங்கள்
மொத்தமாகவும் சில்லரை யாகவும் கிடைக்குமிடம்,
காமதேனு டெக்ஸ்டைல்ஸ்
ஈஸ்வரன் கோவில் தெரு - ஈரோடு.

கைத்தறியாளர் துயர் நீங்க சர்க்காருக்கு சில யோசனைகள்!

சங்கரன்கோவில் கைத்தறி நெசவாளர் சங்கம் கூறுகின்றது

நமது சென்னை ராஜ்யத்தில், சர்க்காரின் புள்ளி விவரப்படி சுமார் 8 லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 25 லட்சம் மக்கள் கைத்தறி தொழிலை நம்பி வாழ்கின்றனர். நம் நாட்டின் புராதன தொழிலாகிய கைத்தறி தொழிலை நடத்திவரும் நெசவாளர்களின் நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகையால் சர்க்கார் இதில் கவனம் செலுத்தி உடனடியாக ஆவன செயயவேண்டும்.

நெசவாளர்களின் தற்போதைய நிலை.

1—3—52 முதல் பண்டங்களின் விலைவாசிகள் இறங்கி வருவதை முன்னிட்டு ஜவுளிகளின் விலையும் மிகவும் குறைந்தபடியால் நெசவாளர்களின் கூலியும் வெகுவாசக் குறைக்கப்பட்டுள்ளது. இவ் வருடம் ஜனவரி மாதத்தில் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் களி 1க்கு ரூ. 1—0 0 வீதம் கூலி கொடுக்கப்பட்டது. தற்போது களி 1க்கு அணா 0—5—0 வீதம் தான் கொடுக்கப்பட்டுவருகிறது. அதாவது 6 மாதத்திற்கு முன்னால் கிடைத்த கூலியைவிட 3ல் 1 பங்குக்கும் குறைவான கூலிதான் கிடைத்து வருகிறது. தற்போது கிடைத்துவரும் 5 அணா கூலிச் குத் தறிகாரர்கள் தமது குடும்பத்தோடு வேலை செய்தாலும் நாள் 1க்கு 0-12-0 அணா கூலி கிடைப்பதும் அரிதாக இருக்கிறது. குறைந்த கூலிக்கு உற்பத்தியாகும் ஜவுளியும் மார்க்கெட்டில் விற்பனையாகாமல் தேங்கி வருகிறது. ஜவுளியைத் தேங்காமல் விற்பனை செய்து வருவதற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது.

நூல் விலையை உடனடியாகக் குறைக்க வேண்டும்.

தற்போது இருக்கும் நூல் விலையானது ஒரு உருப்படியின் அடக்க விலையில் "முக்கால் பாகம்" நூல் விலையும் "கால் பாகம்" நெசவு கூலியும் ஆகிறது. அதாவது 75% நூல் விலையும் 12% செலவும் 12% கூலியும் ஆகிறது. மேற்படி கூலியில் பாதித்தொகை பாவு ஆற்றல் முதலிய செலவுகளுக்கு செலவாகிவிடுகிறது. ஆகவே நெசவாளியின் வாழ்க்கைக்கு மீதித்தொகையான மிகவும் குறைந்த தொகைதான் கிடைக்கிறது. இந்த நிலை மாற வேண்டுமானால் நூலின் விலையை உடனடியாகக் குறைக்க வேண்டும். அதாவது 44-45ம் வருஷங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நூல் விலைக்கு இன்றைய நூல் விலையைக் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதனால் நெசவாளிகளுக்கு சிறிது அதிகக்கூலி கிடைக்க வழி ஏற்படுவதோடு ஜவுளியின் அடக்க விலையைக் குறைப்பதற்கு முடியுமாகையால் ஜவுளித் தேக்கத்தையும் நிவர்த்தி செய்யலாம். மில் துணிப் போட்டியைக் கண்டு அஞ்ச வேண்டுவதுமில்லை.

மில் போட்டியிலிருந்து கைத்தறியைப் பாதுகாக்க வேண்டும்.

நமது ராஜ்யத்தில் ஜில்லாவாரியாக நெசவாளர் கமிட்டிகள் அமைத்து மேற்படி கமிட்டியின் மூலம் ஆங்காங்கே கைத்தறியில் உற்பத்தியாகும் ரகங்களின் விபரங்களைத் தயார் செய்து அந்த ரகங்களுக்குப் போட்டியாக மில்களில் உற்பத்தியாகும் ரகங்களைத் தடை செய்து கைத்தறித் தொழிலை பாதுகாக்க வேண்டுவதுடன், மேலும் அந்தந்த ஜில்லாக்களில் உற்பத்தியாகும் ரகங்களுக்குத் தக்கபடி தேவையான நம்பர் நூல் கிடைக்கவும் வசதி செய்ய வேண்டும்.

நூல் விநியோகத்தைச் சர்க்காரால் நடத்தப்படும் டிப்போக்கள் அல்லது நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவே நடத்த வேண்டும்.

சென்னை ராஜ்யத்திலுள்ள கைத்தறிகளை டெக்ஸ்டைல் அதிகாரிகளால் கணக்கெடுக்கப்பட்டு அதன்பேரில் வழங்கப்பட்ட நூல் ரேஷன் கார்டுகளின்பேரில் "ஹோல் சேல்" லைசென்ஸ்தார், ரீட்டைல் லைசன்ஸ்தார் மூலம் நூல் விநியோகிக்கப்படுகிறது இம்முறையில் விநியோகிக்கப்படும் நூலானது மில் விலையிலிருந்து ரூ 1-க்கு $1\frac{1}{4}$-அணா லாபம சேர்த்து நெசவாளிக்குக் விற்கப்படுகிறது. லாப விகிதம் அதிகமாயிருப்பதால் நூல் கிரயம் அதிகமாகிறது. ஆகவே ரூபாய்க்கு முக்கால் அணா மட்டும் லாபம் சேர்த்து நூல் விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். மேற்படி லாப விகிதத்தைக் குறைத்து விற்பனை செய்ய நூல் விநியோகத்தை சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட டிப்போக்கள் மூலமாகவோ அல்லது நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவோ நடக்க வேண்டும்.

கன்சியூமர் கோட்டா முறையை ரத்து செய்ய வேண்டும்.

நூல் விநியோகத்தில் கன்சியூமர் கோட்டா முறையின் மூலம் சிலருக்கு தறி 1க்கு 2 கட்டு விதமும் மற்றய தறிகளுக்கு மிகக்குறைந்த விகித அளவு நூலும் கிடைத்து வருகிறது. இப்படி நெசவாளர்களிடையே நூல் விநியோகம் செய்வதில் ஏற்றத் தாழ்வு ஏற்படுவதால் கன்சியூமர் கோட்டா முறையை ராஜ்யம் முழுவதும் ரத்து செய்து எல்லா நெசவாளர்களுக்கும் ஒரே அளவாக நூல் விநியோகம் செய்ய இன்றைய விநியோகத் திட்டத்தை திருத்தியமைத்தாக வேண்டும். பாரபட்சம் என்பது தவிர்க்கப்பட வேண்டும் - ஒழிக்கப்பட வேண்டும்.

கலர் நூல் லைசென்சு முறையை ரத்து செய்ய வேண்டும்.

சாயப் பட்டரை வைத்து நடத்துபவர்களுக்குக் கலர் நூல் லைசென்ஸ் என்ற முறையில் நூல் கோட்டா ஒதுக்கப் படுகிறது. மேற்படி கோட்டா நூலை சாயம் தோய்த்து வெளி மார்க்கெட்டில் 10 ராத்தல் கட்டு 1க்கு ரூ. 5 ஆக நல்ல சாயம் போட்டுக் கொடுக்கும்பொழுது அதைவிட மட்டரகமான சாயம் தோய்த்து 10 ராத்தல் கட்டு 1க்கு ரூ. 12½ ஆக சாயக்கூலி போட்டுத் தறிக்காரர்களிடம் பகல் கொள்ளை நடத்த அனுமதிக்கப்படுகிறது. கலர் நூலின் விலை அதிகமாக இருப்பதால் நெசவாளர்களுக்குக் கிடைக்கும் கூலி குறைவதோடு ஜவுளியின அடக்க விலையும் அதிகமாகிறது. சாயமும் உத்திரவாதமாக இருப்பதில்லை. ஆகவே கலர் நூல் லைசென்ஸ் முறையை ரத்து செய்து எல்லா தறிகளுக்கும் வெள்ளை நூலாகாவே சப்ளை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

அவரவர்கள் தயாரிக்கும் ரகங்களுக்கேற்ப நூலைத் தங்களுக்குத் தேவையான கலர்களில் நம்பிக்கையான கெட்டிச்சாயம் தோய்க்கும் சாயச்சாலையாளரிடம் கொடுத்து சாயம் துவைத்துக் கொள்ள நெசவாளர்களை அனுமதிக்க வேண்டும். சாய நூல் கோட்டா என்ற பெயரில் சிலரைப் பணக்காரர்களாக மாற்றித்தரும் ஏற்பாடு ஒடுபட்டாக வேண்டும்.

எல்லாத் தறிகளையும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் தொழில் நடத்தி வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்று ராஜ்யத்திலுள்ள கைத்தறிகள் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும், மாஸ்டர் வீவர்கள் மூலமாகவும், சொந்தமுறையிலும் தொழில்கள் நடத்தி வருகின்றன. இம்முறையால் துணிகள் நல்ல முறையில் ஒரேமாதிரியாக-தரமுள்ளதாகத் தயார் செய்ய முடியாமலும் அடக்க விலைகளைச் சரிபார்த்துக் கட்டுப்பாடாக ஜவுளிகளை விற்க முடியாமலும் தறிகாரர்களுக்குக் கட்டுப்பாடாகக் கூலி கொடுக்க முடியாமலும் போகிறது. அடிக்கடி தொழில் மந்தமும், கூலித் தகராறுகளும் தொழிலாளரிடையே ஏற்படுகிறது. ஆகையால் தறிகள் அனைத்தையும் கூட்டுறவு சங்கங்களில் சேர்த்து நூலைக் கொடுத்து, நல்ல கூலி கொடுத்து, நல்ல துணிகளாகத் தயார் செய்து உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் கொண்டுபோய்ச் செலவு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சர்க்கார் பண உதவி செய்து அவ்வியக்கத்தை வளர்க்க ஊக்கமளிக்க வேண்டும்.

மேற்கண்ட அனைத்தையும் சர்க்கார் கவனித்து; தறிகாரர்களுக்கு தக்கதுசெய்து அவர்களது வாழ்வை வளமாக்கும்படி செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

சென்னிமலை P. O.

எங்களிடம் 20 நெ. முதல் 30 நெ. வரை நூலில் எங்கள் சங்க அங்கத்தினர்களால் தயார்செய்த 5, 6, 7, 7½ கெஜம் 42, 44 அங்குல அகலங்களில் கலர் சேலைகளும், வேஷ்டி, துண்டு, காடா பீஸ் ரகங்களும்

விலை சரசமாய்க் கிடைக்கும்.

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

M. P. நாச்சிமுத்து, B. A., B. L. தலைவர்.

[3-ம் பக்கத்தொடர்ச்சி.]

கொள்ளப்பட்ட—சிலரின் சுய நன்மைக்கான— பாதையிலேயே அதன் முடிவுகள் இருக்கக்கூடாதென்பது கண்டிப்பாய்க் கடைப்பிடிக்க வேண்டியதாகும்.

நூல் கட்டாயப் பங்கீடே தேவை!

இன்று தற்காலீகமாக ரத்து செய்யப்பட்டிருக்கும் இவ்வுத்திரவை மேற்கொண்டு நீட்டிக் கொண்டு போகக்கூடாதென்பதோடு அதை இம்போதே ரத்தும் செய்துவிட வேண்டுமெனக் கோருகிறோம். வழக்கம் போல நூல் பங்கீடு முறையை அமுலுக்குக் கொண்டுவந்துவிடவேண்டும்.

நேற்றுவரை இருந்து வந்த நூல் விநியோகம் ஒரு கட்டாயப் பங்கீடு அல்ல; அது ஒரு பரீட்சார்த்த பங்கீடு முறையே. அது ஒழிக்கப்பட்டு கட்டாய நூல் பங்கீடு முறையை அமுலுக்குக் கொண்டு வந்தாகவேண்டும்.

மத்திய ச்ர்க்காரின் டெக்ஸ்டைல் கொள்கை பருத்தி, நூல் ஜவுளிக் கட்டுப்பாடுகளையோ, விநியோக முறையையோ நீக்கக்கூடாது என்றிருக்கும் போது, நாம் மட்டும் இப்படி படிப்படியாக நீக்க வேண்டுமென நினைப்பது இடைக்கால சந்தோஷத்தை சிலருக்கு அளித்தாலும் நிரந்தரமான பல தொல்லைகளையே இப்போக்கு விளைவிக்கும் என்பதை உணர்ந்தாகவேண்டும்.

நூல் கட்டாயப் பங்கீட்டு முறையில் எவருக்கும் பாரபட்சம் காட்டாது யாவருக்கும் சமமான அளவிலேயே நூல் கிடைக்கும்படியாக விநியோகக் கட்டுப்பாடு உத்திரவைத் திருத்தியமைத்தாகவேண்டும். "யானை செத்தாலும் ஆயிரம் பிழைத்தாலும் ஆயிரம்" என்று சொல்லும் பழமொழிப்படி கண்ட்ரோல் அமல் செய்தாலும் அல்லது நீக்கினாலும் சிலர் அச்சந்தர்ப்பங்களைத் தங்களின் கொள்ளைலாபத்தின் நலனுக்கு உபயோகப்படுத்திக்கொள்வது என்ற பேராசைப் பிசாசுக்கு சமாதி கட்டியேயாகவேண்டும்.

நூல் விநியோகத்தில் இன்றுள்ள நூல் வர்த்தகர்களை மட்டுமின்றி, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களையும் ஈடுபடுத்தி ஒழுங்கான பங்கீடு நடைபெறப் பார்த்துக் கொள்வதோடு, பங்கீடு அமல் படுத்தும்போது எழுகின்ற போலித்தறிப் பிரச்னைகளையும் வெற்றிகரமாக சமாளிக்க நடைமுறையில் முயன்றாக வேண்டும். அவ்வகையில் சர்க்காருடன் ஒத்துழைக்க ராஜ்யத்திலுள்ள நெசவாளர் ஸ்தாபனங்கள் தயாராகவே யிருக்கின்றன.

டெக்ஸ்டைல் மார்க்கெட் உலக மார்க்கெட்டுகளோடு பிணைக்கப்பட்டிருப்பதால் அதன் முடிவுகளையும், விளைவுகளையும் தனிப்பட்ட சிலரின் நன்மையை அடிப்படையாக வைத்துப்பார்க்காது எல்லா நெசவாளர்களின் நலனையும் நடுநாயகமாக வைத்துப் பார்த்தால் நிச்சயம் இன்றுள்ள நிலையில் கட்டாய நூல் பங்கீட்டுத் திட்டத்தை நெசவாளர்கள் மத்தியில் அமல் படுத்துவதைத் தவிர வேறு சிறந்த திட்டம் ஒன்றுமிருக்க முடியாது என்பதை உணர முடியும். அம்முறையிலேயே தான் நாம் நூல கட்டாயப் பங்கீட்டை வற்புறுத்துகிறோம்.

நிர்ணயஅளவுகிடைக்க!

அதே காலத்தில் இந்த ராஜ்ய கைத்தறிகளின் மொத்த தேவையான 39ஆயிரம் நூல் பேல்களும் கிடைக்க ராஜ்ய சர்க்கார் பார்த்துக்கொள்ள வேண்டும். அ. இ. திட்டப்படி நிர்ணயிக்கப்படுகிற மாகாண கோட்டாவை மில்கள் தவறாது ஒழுங்காக சப்ளை செய்துவர கண்காணிக்கும் அதிகாரம் ராஜ்ய சர்க்காருக்கு இருந்தாக வேண்டும்.

எப்படிப் பட்ட சிறந்த விநியோகத் திட்டத்தை வகுத்துக் கொண்டாலும் நூல்உற்பத்தியில் நம் கண்காணிப்பு - மேற்பார்வை இல்லாவிடில் அத்திட்டம் நிச்சயம் தோற்றுத்தான் போகும்என்பது தெளிவு. அதனாலேயேதான் மேற்கண்ட அதிகாரம் ராஜ்ய சர்க்காரின் கையில் இருக்க வேண்டுமென நாம் வற்புறுத்துவது.

பஞ்சாலை அதிபர்கள் நூல் நெருக்கடி தீர, கைத்தறி நெசவுத் தொழில் அபிவிருத்திக்கு வழி கூற முன் வருவதெல்லாம் அவர்களது நலன் பாதுகாக்கப்படவேயல்லாது, உண்மையிலே தறிகாரர்களின் நலன்களுக்கல்லவென்பதை நாம்முன்பு பல தடவைகளிலும் எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம். அவையாவும் முற்றிலும் உண்மையாகிவந்திருப்பதும் யாவரும் அறிந்த தொன்றாகும்.

எனவே, ராஜ்யசர்க்கார் நமது மேற்கண்ட ஆலோசனையை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென ஆசைப்படுகிறோம்.

[19-ம் பக்கத்தொடர்ச்சி]

ளம் அடித்துக் கொண்டு போகிறது என்கிறார். கடைசியாக அவருக்கு கைத்தறி ஜவுளி வியாபாரமே எதற்கும் ஆகாது என்று ஆகிவிட்டது. போனதெல்லாம் போகட்டும். நீயாவது நன்றாகப் படித்து ஓர் உயர்ந்த உத்தியோகத்திற்கு வா. நீயும் ஜவுளி வியாபாரம் செய்யலாம் என்று கனவிலும் கருதாதே. நீ ஒரு சாதாரண குமாஸ்தாவாக ஆனாலும் சரி. எனக்கு சம்மதம். கைத்தறி ஜவுளி வியாபாரியாக மட்டும் வராதே. காரணம்இன்றைய நிலையில் இதில்யாரும் உருப்பட முடியாது. இதில் முன்னுக்கு வரவும் முடியாது. வந்தால் வாழவும் முடியாது. நீ காலேஜ் மாணவன். ஓரளவு உனக்கு உலகம் தெரியும் இதுதான் நான் உனக்குக் கூறும் புத்திமதி. மற்றபடி உன் உடல் ஆரோக்கியத்தைக் கவனமாகப் பார்த்துக்கொள். அடிக்கடி கடிதம் போடு. என் கைக்குழந்தை நன்றாக இருக்கிறாள். சுபம்.

உன் அன்புள்ள அக்காள்,
மனோகரி.

நாட்டுச்செய்தி

சென்னை சர்க்கார் கைத்தறி ஜவுளி வாங்காது!

இரண்டு மாதங்களுக்கு முன்னதாக "ரூபாய் இரண்டு கோடிக்கு கைத்தறி ஜவுளி ரகங்களில் தனது தேவைக்கானதை சர்க்கார் வாங்குவர்" என்ற அறிவிப்பை சென்னை நிதி அமைச்சர் வாயிலிருந்து கேள்விப்பட்டு மகிழ்ந்தோம். ஆனால், அம்மகிழ்ச்சி வெறும் வெத்து வேட்டாக்கப் பட்டு விட்டது முதல் அமைச்சர் ராஜாஜி அவர்களால்!

சட்ட சபையில் கேள்வி நேரத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் கேட்ட கேள்வியொன்றுக்கு ராஜாஜி அவர்கள் பதில் கூறும் போது, இப்போது இருப்பிலுள்ள 'கைத்தறிஜவுளியை வாங்குவதால் கஷ்டத்தை இன்னொரு சமயத்திற்கு தள்ளிப் போடுகிறோமே ஒழிய அதற்கு நிரந்தரப் பரிகாரம் தேட வில்லை யென்றே ஆகும்" என்றும், சர்க்கார் கைத்தறி ஜவுளி வர்த்தகம் செய்யத் தயாரிலில்லை யென்றும் கூறியுள்ளார்.

தொடர்ந்து "தற்போது நெசவாளர்களின் கையிருப்பிலுள்ள ஜவுளி பூராவையும் சர்க்கார் வாங்கிக் கொள்ளுமா?" என மற்றொரு மெம்பர் உபகேள்வி கேட்க "அவ்வாறுசெய்வதற்கில்லை" யென தொழிலமைச்சர் டாக்டர் யூ. கிருஷ்ணராவ் பதில் கூறியிருக்கிறார்.

எனவே, "கைத்தறி ஜவுளியை ரூபாய் இரண்டு கோடிக்கு தன் தேவைக்காக சர்க்கார் வரும் மூன்று மாதங்களில் வாங்குவா" என்று கூறியது அவதியுறும் நெ

டுத்தும் சாணக்கியமாக உபயோகிக்கப் பட்டிருக்கிறதே தவிர உண்மையில் அப்படிப்பட்ட நோக்கமே சர்க்காருக்கில்லை யென்றே மேற்கண்ட உண்மைகள் மூலம் நன்கு அறிய வருகிறது.

ரகப்பிரிவினை: மத்ய சர்க்காருக்கு சிபார்சு!

"கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்வதற்கென்று சிலரக ஜவுளிகளைப் பிரத்யேகமாக ஒதுக்கிவிட வேண்டுமென்றும், மில்கள் பிரஸ்தாப (வேஷ்டி, புடவை போன்ற) ரக ஜவுளிகளை உற்பத்தி செய்யக் கூடாது என்றும் நான் அபிப்ராயப் படுகிறேன்" என ராஜாஜி சட்ட சபையில் அறிவித்துள்ளார். தொடர்ந்து சென்னை பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போதும் இந்த ரகப்பிரிவினை சிபார்சை மத்ய சர்க்காருக்கு அனுப்பியுள்ளதாகவும் கூறியிருக்கிறார்.

ராஜாஜியின் இச்சிறந்த ஆலோசனையை மில் முதலாளிகள் எதிர்க்கிறார்கள் என்றாலும், ராஜ்ய கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தப்பட்ட வரை பூரணமாக வரவேற்கவே செய்கின்றனர். ராஜாஜியின் சிபார்சை மத்தியசர்க்கார் ஏற்றுக்கொண்டு, கைத்தறி நெசவாளர்களின் தொழில் நெருக்கடியைச் சமாளிக்க முன் வரவேண்டுமென நாம் கோருகிறோம்.

சென்னை முதல் அமைச்சரின் சிபார்சை கிராமீய குடிசை தொழில் அபிவிருத்தியில் அக்கறை கொண்டவரும், சிறந்த காந்தீயவாதியுமான ஆச்சார்யவினோபா அவர்கள் வரவேற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சென்னையில் கைத்தறித் துணி பொருள்காட்சி!

சென்ற மாதம் 15ம் தேதி சென்னையில் கூடிய தமிழ்நாடு நெசவாளர் காங்கிரசின் நிர்வாக

மிகக் குறுகிய காலத்தில் பிரமிக்கும் முன்னேற்றம்!

- சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க பிரதம நிர்வாகிகளாலும், திருவாங்கூர்—கொச்சி ராஜ்ய சர்க்கார் குடிசைத் தொழில் அபிவிருத்தி போர்டாராலும் நேரில் பார்த்துப் பெரிதும் வியந்து பாராட்டப்பட்டது.
- ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்கம், மற்றும்பல நெசவாளர் பிரதம கூட்டுறவு சங்கங்கள். வர்த்தகர்கள் ஆகியோரின் திருப்திக்கேற்ப கைத்தறி, பவர்லூம் & மில் துணிகளைச் சீட்டியாக புத்தம்புது மோஸ்தர்களில் மில் பிரிண்ட் செய்தும், பாலிஷ்செய்தும் அனுப்பித்தருகிறோம்.

மற்றவர்களின் தேவையையும் பூர்த்தி செய்து தருவதற்கு தயாராயிருக்கிறோம்

விவரங்களுக்கு :

M. & C. பிரிண்டிங் மில்ஸ்,
தபால் பெட்டி நெ. 61, ஈரோடு.

க்குழுக் கூட்டம், சென்னை நகரத்தில் வரும் டிசம்பர் மாதம் அலை இந்திய கைத்தறி துணிகள், கிராமீய குடிசைக் கைத்தொழில் பொருள்களின் பொருட் காட்சியொன்றை நடத்துவது என்று முடிவு செய்துள்ளது.

இது போன்ற பொருள் காட்சிகள் ஒவ்வொரு ஜில்லா தலை நகரங்களிலுமே நடத்தவேண்டுவது இன்றைய நிலையில் மிக அவசியமாகும். நிர்மாணமான இச் சேவை, உண்மையிலேயே நாட்டுமக்கள் உள்ளத்தில் சுதேசிய எண்ணத்தை வளர்க்கவும், கிராமீய குடிசைத் தொழில்களுக்கு ஆக்கமேற்படுத்தவும் நிச்சயம் உதவும் என்பதில் சந்தேகமில்லை.

இம் முயற்சிக்குராஜ்யத்திலுள்ள கைத்தறியாளர்கள், அவர்களது ஸ்தாபனங்கள் ஆதரவு தருவதும், சர்க்கார்வேண்டிய ஒத்துழைப்பை அளிப்பதும் மிக அவசியமாகும்.

மத்யப்பிரதேச சர்க்கார் கைத்தறி ஜவுளி வாங்கும்!

கூட்டுறவு இலாகா மான்யப் பிரரேபனை மீது கடுமையான விவாதம் மத்யப்பிரதேச சட்டசபையில் நடைபெற்றது. எதிர் கட்சித் தலைவர், நெசவாளர்களின் குறைகளை சர்க்கார் கவனிக்கத் தவறிவிட்டது" என குற்றம் சாட்டிப் பேசினர்.

அவருக்குப் பதிலளிக்கும் போது தான் விவசாய மந்திரி ஸ்ரீ ஷங்கர்லால் திவாரி "கைத்தறித் துணியைத்தான் எல்லாவித காரியங்களுக்கும் உபயோகப்படுத்த வேண்டுமென்று எல்லா இலாக்காக்களுக்கும் மத்ய பிரதேசசர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனர்" எனக்கூறியுள்ளார்.

அத்துடன் மத்தியப் பிரதேச மாகாண நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ. 5 லட்சம் கடன்கொடுக்க சர்க்கார் தீர்மானித் திருப்பதாகவும், அத்தொகை மத்ய பிரதேசத்திலுள்ள 261 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் விஸ்தரிப்புக்குப் பிரயோஜனப்படுமென்றும், தவிர கைத்தறித் துணிகளுக்கு மக்களிடையே நல்லதொரு விளம்பரம் செய்ய வருடமொன்றுக்கு ரூ. 12,500 சர்க்கார் கொடுத்துதவுவதாகவும் ஸ்ரீ ஷங்கர் லால் திவாரி தெரிவித்திருக்கிறார்.

மத்யபிரதேச சர்க்காரின் இவ் அறிவிப்புகளை ஒட்டி நம் ராஜ்யசர்க்காரும் தனது முடிவை மாற்றிக் கொண்டால்இங்கும் ஓரளவு கைத்தறித்துணி சர்க்காரின் தேவைக்காகச் செலவாக லாமல்லவா என நேயர்கள் நினைக்கலாம். அந்த எணணம் சரியானதே!

ஜூலைமுடிய மில்ஜவுளி மொத்தம் 29 கோடி கெஜம் ஏற்றுமதி!

நடைமுறை வருடத்தின் இரண்டாவது கால் வருடத்தில் இந்தியப் பருத்தி ஜவுளி ஏற்றுமதிக்கு சர்க்கார் தாராளமாக லைசென்சுகள் வழங்கியதன்மூலம் ஜவுளி ஏற்றுமதியும் கணிச மாகப் பெருகியிருக்கிறது.

கடந்த மே, ஜூன், ஜூலை மாதங்களில் மட்டும் சுமார் 18 கோடி கெஜம் ஜவுளி ஏற்றுமதி செய்யப்பட்டதாக ஆதார பூர்வமான தகவல்கிடைத்திருக்கிறது

உத்திரவாதமான
கெட்டிச்சாயம்
தோய்ப்பவர்கள்
மதராஸ்
ராஜ்யகைத்தறிநெசவாளர்
கூட்டுறவு சங்கத்திடம்
அங்கீகாரம்பெற்றவர்கள்
ஸ்ரீஜெயலட்சுமி
கலர் ஒர்க்ஸ்
சுப்ரமணியசெட்டிவீதி, திருப்பூர்
DASS

நடைமுறை முதல் ஆண்டின், முதல் நான்கு(ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல்) மாதங்களில் மொத்தம் 10 கோடியே 85 லட்சம் கெஜம் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மெல்லிய, மிக மெல்லிய ரக ஜவுளிகளின் தாராள ஏற்றுமதிக்கு கடந்த ஏப்ரல் மாதம் முதல் அனுமதி தரப்பட்டது. மத்திய மோட்டா, ரக ஜவுளி எற்றுமதிக்கு மே மாத மத்தியில்தான் அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் மட்டும் 6 கோடியே 89 லட்சம் கெஜம் துணி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு முன் மார்ச் மாதத்தில் 2 கோடியே 24 லட்சம் கெஜம்தான் ஏற்றுமதி செய்யப்பட்டது. நான்கு மாத காலத்திற்குள் தாராளஏற்றுமதிக்கான (O. G. L.) லைசென்சுகள் வழங்கப்பட்டதால் ஏற்றுமதியின் அளவு மூன்று மடங்காக அதிகரித்து விட்டிருக்கிறது.

ஜூலை மாத முதல் பாதியில் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் 3 கோடியே 8 லட்சம் கெஜம் ஜவுளி ஏற்றுமதி செய்யப்பட்டது.

அதே ஜூலை மாதம் 16ந் தேதியிலிருந்து 29 தேதிவரை-சரியாக பதினைந்து நாட்களில் பம்பாய் மட்டுமே 3 கோடியே 10 லட்சம் கெஜம் துணி ஏற்றுமதிசெய்திருக்கிறது. (இதிலிருந்து மில் துணி ஏற்றுமதியில் பம்பாய் எப்படி மற்ற பிரதேசங்களைவிட முன்னணியிலிருக்கிறது என்பது தெரிகிறதல்லவா? ஆ-ர்)

1952-ம் வருடம் ஆரம்பம் முதல் இதுவரை சுமார் 29 கோடி கெஜம் ஜவுளிஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. ஜூன், ஜூலை மாதங்களில் ஏற்றுமதி செய்த அளவிற்குமேலும் தொடர்ந்து ஏற்றுமதி செய்தால் இந்தியா தனது லட்சிய அளவை எட்டிவிட முடியுமா? இவ்வாண்டின்

ஏற்றுமதி லட்சிய அளவு மொத்தம் 80 கோடி கெஜங்கள் என மத்ய சர்க்கார் தீர்மானித்துள்ளார்கள். அதன்படி இன்னும் நான்கு மாத காலத்தில் சுமார் 50 கோடி கெஜம் இந்தியா ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கிறது.

சென்ற ஆண்டு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 79 கோடியே 10 லட்சம் கெஜங்களாகும். அதே காலத்தில் உற்பத்தி மில் துணிமட்டும் கிட்டத்தட்ட 370 கோடி கெஜங்களாகும்.

நூல் விலை நிர்ணயம்:
சென்னை சர்க்காரை கலப்பதில்லை!

நூல் விலை ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அவ்வப்போதுள்ள பஞ்சு விலை, உற்பத்திச் செலவு போன்றவைகளின் நிலைமைக்கேற்ப திருத்தி அமைக்கப்படுகிறது. சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் திடீரென்று நூலுக்கு விலை உயர்த்தப்படுகிறது. அதன் விளைவாக அதிகம் பாதிக்கப்படுவது சென்னைராஜ்யத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள் தான்

காரணம்; கைத்தறி நெசவாளர்கள் தயாரிக்கும் துணி மில் துணியோடு விலையில் சிலரகங்கள் போட்டியிட்டு விற்க வேண்டியிருப்பதால் தான் என்பது தெளிவு

மில் துணி மார்க்கெட்டோடும் வெளி நாட்டு ஏற்றுமதி மார்க்கெட்டோடும் வசதி படைத்த பெரும் மில் முதலாளிகளுடன், நூல் விலை ஏற்றத்தால் துணியின் அடக்க விலை அதிகமாகித் தவிக்கும் நெசவாளியால் போட்டியிட முடிவதில்லை. அப்படி போட்டியிட்டாகவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறபோது, தனது கூலியை—சில சமயங்களில் மூலப் பொருளின் விலையில் கூட குறைத்து நஷ்டத்திற்கு விற்று விட்டு மேற்கொண்டு தொழில் செய்ய மூலதனமின்றி நெசவாளி கஷ்டப்பட்வேண்டியிருக்கிறது.

இந்த நிலைமை அடிக்கடி நிகழ்வதால்தான் நூல் விலை நிர்ணய ஸ்தாபனத்தில் இந்த ராஜ்ய நெசவாளர்களுக்கும் பிரதிநிதித்வம் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தி வரப்படுகிறது.

இதே பிரச்னை மீது சென்னை சட்ட சபையில் குடியாத்தம் திரு ஏ. ஜே. அருணாசலம் எம். எல். ஏ. (காங்கிரஸ்) அவர்கள் கேள்வி ஒன்றை எழுப்பினார். அதுபோது ராஜ்யதொழிலமைச்சர் பகிரங்கமாக ஒப்புக் கொண்டார்; நூல் விலை நிர்ணய விஷயத்தில் சென்னை சர்க்காரைக் கலந்து முடிவு செய்யப்படுவதில்லையென்று. "நூல் விலை நிர்ணய போர்டில் சென்னைக்கும் பிரதிநிதித்வம் இருக்குமாறு சர்க்கார் கோருமா?" என்று கம்யூனிஸ்ட் எம். எல். ஏ. நாகிரெட்டி கேட்ட உபகேள்விக்கு, "கவனிக்கப்படுமென" பதில் அளிக்கப்பட்டிருக்கிறது சர்க்கார் தரப்பில்.

"கவனிக்கப்படும்" என்பதோடு சர்க்கார் நின்றுவிடாமல், கைத்தறித் துணி மார்க்கெட் நிலவரத்தை அடிக்கடி பாதித்துக் கொண்டிருக்கும் நூல் விலை நிர்ணய விஷயத்தில் மேற்படி போர்டில் நிச்சயமான ஸ்தானம் பெற சர்க்கார் தீவிர முயற்சி யெடுத்துக் கொள்ள வேண்டுமென நாம் வற்புறுத்துகிறோம். ●



வெளி-வந்துவிட்டது!

"பவிஷ்யம்"

ஜோதிட மாதப் பத்திரிகை.

தனிப்பிரதி

0-6-0

ஆண்டு சந்தா

4-0-0

மானிடராய்பிறந்த ஒவ்வொருவரும் தம்முடைய எதிர்காலத்தை தெரிந்து நடக்கக்கூடிய ஜோதிஷம், கைரேகை சாஸ்திரம், இலவச கூப்பன், சிறிய கதைகளும் முக்யமாய் வியாபாரிகள் கவனிக்க வேண்டிய பஜார் நிலவரங்களின் ஏற்றம் இறக்கம் இவைகள் தெளிவாக கொடுக்கப் பட்டிருக்கின்றன.

ஏஜண்டுகள் இல்லாத இடங்களில்
டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகளே தேவை.

விவரங்களுக்கு: 'பவிஷ்யம்' காரியாலயம்
23/249 தொரையர் வீதி, கோயமுத்தூர்.

கைத்தறித் துணியையே ஆதரிக்க வேண்டும்!

ம. ராசமணி.

நெசவுத் தொழில், மக்கள் நாகரிகம் அடையவே காரணமாயிருந்தது. 'இழைநக்கி நூல்நெருடும்' என்றுஇரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் தன் தொழிலைப்பற்றிக் கூறினார். உத்தரமேரூர்ச் சாசனம் நம்நாடு அயல்தேசங்களுக்குத் துணியனுப்பியதாகச் சான்று தருகிறது.

முற்காலத்தில் நெசவு செய்வோர் பெரிதும்மதிக்கப்பட்டு வந்தனர். கஷ்டமின்றி வாழ்ந்து வந்தனர். 'நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை' என்ற அடி இதை உணர்த்தும், செல்வர்களின் வரிசையிலே அன்று சிறந்திருந்த நெசவாளி இன்று பாட்டாளிகளின் பட்டியலிலே பதியப் பட்டிருக்கிறான் என்பதற்குக் காரணம் என்ன? என்ற கேள்விக்கு விடை காணவே இக் கட்டுரை உதவும்.

பதினைந்தாம் நூற்றாண்டுவரை நெசவாளர்களின் நிலை எப்படியிருந்தது என்பதை ஆராய்வோம். கிரேக்க நாட்டுச் சரித்திரத்தை எழுதும் ஆசிரியர்கள் தங்கள் நூலில் "பதினைந்தாம் நூற்றாண்டுவரை இந்தியாவிலிருந்து நமக்கு பருத்தி, பட்டு ஆடைகள் இறக்குமதியாயின. அதற்குப்பதிலாக நாம் ஏற்றுமதி செய்ய ஒரு பொருளும் அவர்களுக்கு அவசியமில்லாதிருந்தது, ஆகவே தங்கப் பாளங்களைக்கொடுத்து வந்தோம். அதனால் இந்தியர்கள் செல்வர்களாயிருந்தனர்" என்று குறிப்பிடுகின்றனர். இதன் மூலமாகவும் இன்னும் பல சான்றுகள் மூலமாகவும் இந்தியாவானது பல நாடுகளுக்குத் துணி அனுப்பி வந்துள்ளது புலனாகும். மேலும் இந்நாட்டவர் எல்லோரும் இந்திய கைத்தறித் துணியையே அணிந்து வந்தனர்.

இந்த நிலையில்தான் சீனாவில் பட்டு உற்பத்தி அதிகமானது. சீனர்கள் தங்கள் பட்டுக்கு இந்தியாவில் மார்க்கெட் ஏற்படுத்தத் துணிந்தனர். இந்தியர்கள் பட்டை மதிக்கவே இல்லை. அவர்கள் அயல் நாட்டுத் துணிகளை விரும்பாது தன்னாட்டுத் துணிகளையே ஆதரிக்கவே சீனர்கள்தோல்வியுற்றுத் தங்களுக்கு மார்க்கெட்தேட 'சன்யாட்சென்' என்பவரோடு சில தூதர்களை அனுப்பினார்கள். கடைசியில் அவர்கள் தங்களது முயற்சியில் தோற்றார்கள். உள்நாட்டுத்தேவை அயல் நாட்டுத் தேவை இரண்டையும் பூர்த்தி செய்து ஊதியத்தோடு நெசவாளர்கள் வாழ்ந்தனர் அன்று.

இங்கிலாந்தில் 'தொழில் புரட்சி' ஏற்படவே அங்கு அதிக ஆடைகள் உற்பத்தியாயின. அதற்கு மார்க்கெட் தேட விரும்பிய ஐரோப்பியர் இந்தியாவுக்கு வந்து கடைசியில் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அவர்களின் ஆடை அழகாக இருந்தது. அதனால் அவர்களுக்கு ஒரு நல்ல சந்தையாக இந்தியா நாளடைவில் மாறியது; மேலும் அவர்கள் மில்களை இந்தியாவிலேயே நிறுவினார்கள். மில்கள் அதிக ஆடையை உற்பத்தி செய்யவே அவை இந்தியர்களின் தேவையைப் பாதிக்கு மேல் பூர்த்தி செய்ய ஆரம்பித்தது.

இதேசமயம் ஐரோப்பியர் பல நாடுகளைக் கைப்பற்றி அவைகளைத்தம் ஆடையாலும், மில்களாலும்நிரப்பவே அந்நாடுகளுக்கு இந்தியாவினின்று வந்த இறக்குமதிச்சரக்கை நிறுத்தவேண்டிய அவசியம் நேர்ந்தது. கடைசியில் ஆங்கிலேய அரசாட்சியில் கைத்தறித் தொழிலாளர் உலக தேவையை பூர்த்தி செய்ததை விட்டு விட்டு இந்தியாவின் ஒரு பகுதி கிராம மக்களின் தேவையையே பூர்த்தி செய்யும் நிலையையடைந்தனர்.

பதினைந்தாம் நூற்றாண்டில் ஒரு நெசவாளிக் குடும்பத்தில் மகள், மகன், அப்பா, அம்மா நூற்க அதைப் பாவோடி தலைவனும், தலைவியும் ஆடையாக்கி உடையின் ஊதியமெல்லாம் அடைந்து வந்தனர். இருபதாம் நூற்றாண்டில் (பதினேழாம் நூற்றாண்டிலிருந்தே) மில்களில் நூற்ற நூலைப் பாவோடி அக்குடும்பமே கூலி வாங்கிப் பிழைக்கும் நிலைக்குப்பின் தங்கிவிட்டது.

பசுமரம் பட்டுவிட்டது. மீண்டும் துளிர்க்க வைக்க வேண்டும். இது புத்திசாலித்தனம். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

இப்போது கைத்தறித் துணியை அணிபவர்களில் எண்பத்தைந்து சதவிகிதம் கிராமாந்திர மக்

களேயாவர். படித்தவர்கள் - பட்டம் பெற்றவர்கள் கைத்தறித் துணியைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. ஏன்? நம் நெசவாளிகளிற்கூடப் பலர் மில் துணிக்கு மல் யுத்தம் நடத்தும் சாட்சிகளைக்கண்டு வருகிறோமே இன்று. மில் துணி போல் 'கைத்தறித்' துணி பளபளப்பில்லை என்பது உண்மைதான். ஆனாலும் பல பாட்டாளி மக்கள் பசியாறுவதற்காக பளபளப்பை பகிஷ்காரம் செய்யமனந்துணிய வேண்டும். நெசவுசெய்யும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் நிச்சயமாகக் கைத்தறி ஆடையையே அணிய வேண்டும். அப்படியானால் தேவை அதிகப்படும். உற்பத்தி பெருகி ஊதியம் நெசவாளியை நாடிப் போய்ச் சேரும்.

அரசாங்கம் ஆதரவு அளியா எத்தொழிலும் நீடிக்காது என்பது உண்மை. நெசவும் இதற்கு விலக்கல்ல. அரசாங்கம் மில்களைக் குறைக்க வேண்டும். இனி மில்கள் பெருகுமானல் நிச்சயம் இந்திய நெசவாளர்கள் அழிவார்கள். மில்கள் அவசியம் நேரும் பொழுது நூல் உற்பத்தி செய்யலாமேயொழிய ஆடை உற்பத்தி செய்யக்கூடாது என்று கண்டிப்பான சட்டம் போட்டால்தான் ஓரளவு, ஏன் மிகுந்த அளவு நெசவாளர்கள் நிலை உயரும்.

படித்தவர்கள் பகட்டை மறந்து கைத்தறித் துணியை ஆதரிக்கவேண்டும். அரசாங்கம் மில்களின் எதேட்டத் துணிஉற்பத்தியைத் தடுக்க வேண்டும். நெசவாளர்கள் ஒவ்வொருவரும் மில்துணியை ஏறிட்டும் பார்க்கக் கூடாதுஎன்ற வேண்டுகோள் என்னுடையதல்ல, என் போன்ற நெசவாளர்களின் நெட்டுயிர்ப்பு-கைத்தறியாளர்களின் கருத்து என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆங்கில ஆட்சியால் அழிக்கப்பட்ட நெசவுத்தொழில் குடியரசில் ஓங்கிக் குவலயம் சுறக்கவென்று கூறும் நிலையை எய்தவேண்டும்.

நூல் பங்கீடு தற்காலீக ரத்துக்கு கண்டனம்.

ஈரோடு கைத்தறி நெசவாளர் சங்கத் தீர்மானம்.

ஈரோடு கோட்டை நெசவாளர் சங்க காரியதரிசி ஜி. ஷண்முகம் வீட்டில் சங்கத்தலைவர் எஸ். பி. கருப்பண்ணன் தலைமையில் 20—7—52 தேதியன்று நடந்த கமிட்டி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன:-

1

உணவுக் கண்ட்ரோலை எடுத்த தற்கு கனம் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கு சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2

நூல் பங்கீட்டை மூன்று மாத காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதை சங்கம் மிகுந்த வருத்தத்துடன் தனது ஆட்சேபணையைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

3

நூல் மில் வாசலில் இருந்து சில்லரை வியாபாரிகள் வரையில் சட்டப்படி அலாட்மெண்டு செய்யப்படுகிறது. ஆனால் சில்லரை வியாபாரிகளிடம் இருந்து நெசவாளர்களுக்கு நிர்ணய விலைக்கு நூல் கிடைப்பதில்லை. நூல்கட்டு நிர்ணய விலைக்கு மேல் ரூ. 3, 4 வரை அதிகம் கொடுத்தால்தான் நூல் கிடைக்கிறது. இது விஷயத்தில் உடனே சர்க்கார் தலையிட்டு நெசவாளர்களுக்கு நூல் நிர்ணய விலைக்கே கிடைக்க வேண்டிய ஏற்பாட்டை உடனே செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

4

இன்று 20×10 பாவுக்கு நூல் கட்டின் விலை ரூ. 20-10-0 ஆக கட்டும் $2\frac{1}{2}$ பொந்துக்கு கிரயம் 23-3-3, ஊடைக்கு கட்டு 1-க்கு 20-5-0 ஆக கட்டு 1க்கும் பொந்து $2\frac{1}{2}$க்கு ரூ. 22 8-0, பசைக்கு ராகி ரூ. 1-0-0, பாவுதோய ஆள் 6க்கு 2-4-0, பாவுஓடகூலி 1-6-0, ஊடைக்கு தார்சுத்த கூலி 1-1-0 பாவு புனைக்க கூலி 2 பக்கமும் 0-8-0 விறகு 0-4-0 ஆக பாவு 1க்கு பொந்து 45க்கு 50×12 நீளம் பீஸ் 6க்கு ரூ. 52-2-3 ஆகிறது. மேற்படி பாவு 10 நாளில் நெசவு செய்து பீஸ் 1க்கு 8-8-0 ஆக விற்றால் பீஸ் 6க்கும் ரூ. 51 ஆகிறது. இன்றுஉள்ள நூல்விலைக்கு 1-2-3 நஷ்டம் ஏற்படுகிறது நெசவுகூலி இல்லாமல் படி. ஆகவே இன்று உள்ள சில்லரை விலையில்இருந்து கட்டு 1க்கு ரூ. 6-0-0 குறைத்துகிடைக்கவேண்டியஏற்பாடு செய்தால்தான் நெசவளர் குடும்பங்கள் ஓரளவுக்கு குடும்ப வாழ்க்கையை நடத்திக்கொண்டு போக முடியும். ஆகவே நூல் விலையை குறைக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்,

5

நெசவாளர்களுக்கு நூல் சரிவர கிடைக்க கூட்டுறவு சங்கத்தின் மூலம் வேண்டிய ஏற்பாடுகளை சர்க்கார் உடனடியாக செய்யும்படி சங்கம் வற்புறுத்தி கேட்டுக் கொள்ளுகிறது.

உத்திரவாதமான கெட்டிச்சாயம்
தோய்ப்பவர்கள்
மதராஸ்ராஜ்ய
கைத்தறிநெசவாளர்
கூட்டுறவுசங்கத்தின்
அங்கீகாரம்பெற்றவர்கள்
ஆறுமுகம் & கம்பெனி
சாயத் தொழிற்சாலை
கந்தசாமிபாளையம், P.O. ஈரோடுதாலுகா

கைத்தறி

வேட்டி புடவைகள் நெய்திடுவான் — அவன்
வீட்டிலே பார்த்தால் துணிப்பஞ்சம்

— திருமூர்த்தி.

● கோவை 15—8—52 ●

கைத்தறி கமிட்டியின் முடிவுகள்.

இம்மாதம் நான்காம் தேதியன்று சென்னை ராஜ்ய கைத்தறி கமிட்டிகூடி, இன்றைய நெசவுத் தொழில், வர்த்தகம் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்னைகளை பிரத்யட்ச அடிப்படையில் ஆராய்ந்து நல்ல பரிகாரங்களை சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறது. அம் முடிவுகள், தொழில் சம்பந்தப்பட்ட அனைவரின் நல்லெண்ணத்தையும்-வரவேற்பையும் வெகு சீக்கிரத்திலேயே பெற்று விட்டது.

கைத்தறி நெசவாளர்களுக்கு நிவாரண மளிப்பது பற்றியோ, அல்லது தொழில் பாதுகாப்பைப் பற்றியோ, பேச்சுகள் அடிபடுகிற காலத்தில் எல்லாம், மில் முதலாளிகள் தரப்பிலிருந்தும் அவர்களது ஆலோசனைகள் வரத்தான் செய்கின்றன. அவர்களின் ஆலோசனைகளில் பிரதான்யம் வகிப்பதெல்லாம் கைத்தறிகளை ஒழித்துவிட்டு, அந்த இடங்களில் பவர் (மெஷின்) தறிகளை மாட்டி இயக்க வேண்டுமென்பதுதான்!

இதை அவர்கள் சமயங் கிடைத்தபோதெல்லாம் வற்புறுத்தாமலிருப்பதில்லை. உண்மையிலேயே அதனால் ஏற்படும் தீங்கு என்ன என்பதை, மில் முதலாளிகளை விட கைத்தறியாளர்களால் தான் அதிகம் உணர முடியும். பவர் லூம்களை விஸ்தரிப்பதன் மூலம் ஏற்படும் தொழில் நெருக்கடி பற்றியும், அதிலுள்ள அபாயத்தைபற்றியும் நாம்ஏற்கனவேயே "புதியமந்திரிசபைக்கு" என்ற தலைப்பின் கீழ் எழுதி வந்த தொடர் கட்டுரையின் வாயிலாக எடுத்துக் காட்டிவந்தோம்.

அந்த அபிப்ராயத்தை ராஜ்ய கைத்தறி கமிட்டி ஏற்றுக் கொண்டிருப்பது கேட்க நாம் மகிழ்கிறோம். கமிட்டி தனது தீர்மானத்தின் மூலம் "புதிதாகப் பவர் லூம்கள் ஸ்தாபிக்கவும், காம்பொஸிட் தறிகள் பழுதானால் அவற்றைப் புதுப்பிக்கவும் அனுமதி கொடுக்கக்கூடாது" என சர்க்காரைக் கோரியுள்ளது.

இந்த முடிவுக்கு வந்த ராஜ்ய கைத்தறிக் கமிட்டியினருக்கு, கைத்தறித் தொழிலில் ஒரு புதிய மறு மலர்ச்சி யேற்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற குறுகிய எண்ணம் இருந்தது என்று யாருமே சொல்லிவிட முடியாது. அவர்களில் அநேகர் இத்தொழிலில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட வேண்டுமென்பதை ஒப்புக்கொள்பவர்களே. இருந்தாலும் அது எப்படி, எம்முறையில் படிப்படியாக நடைபெறவேண்டு மென்பதையும் உணர்ந்துள்ளதால் தான் யதார்த்த நிலைமைக் கேற்ப மேற்கண்ட சிறந்த முடிவுக்கு கமிட்டியினர் வந்துள்ளனர்.

இரண்டாவதாக இவ் விதழிலிலேயே சர்க்கார் வெளி நாடுகளுக்கு நூலும், துணியும் எவ்வாறு எந்த அளவில் ஏற்றுமதிக்கு அனுமதித்து வருகின்றனர் என்பதை நாம் வேறு ஓர் பக்கத்தில் வெளியிட்டி ருக்கிறோம். அத் தகவல்களைப் படித்துப் பார்ப்பவர்களுக்குத் தெரியும்; "வெளி நாடுகளுக்கு இந்தியப் பருத்தியாலான எந்த சேம்பர் நூலையும் ஏற்றுமதி செய்யக்கூடாது; தடை செய்ய வேண்டும்" என்று ராஜ்யக் கைத்தறிக் கமிட்டியினர் செய்துள்ள முடிவில் பொதிந்துள்ள கருத்து.

இந்தியப் பருத்தியால் நூற்கப்படும் குறைந்த நெம்பர், இடைத்தட்டு நெம்பர் நூல்கள் விலை குறைவானதாகும். அவைகளில் ஒரு பகுதியை வெளி நாட்டு ஏற்றுமதிகளுக்கு அனுமதித்து விட்டு, விலை அதிகமாக ஆகும் அமெரிக்கப் பருத்தியால் நூற்கப்படும் அதிக விலை நூலை இங்குள்ள நெசவாளர்களின் தலையில் சுமத்துவது என்கின்ற ஏற்பாட்டை யார்தான் ஒப்புக் கொள்வர்? ஆகவே ராஜ்ய கைத்தறி கமிட்டியினர் செய்துள்ள முடிவானது சாலப் பொருத்தமானது மட்டுமல்ல; அம்முடிவை நடை முறையில் நிறைவேற்ற ராஜ்ய சர்க்கார் மத்ய சர்க்காரை வற்புறுத்தவும் வேண்டும் என நாம் கோருகிறோம்.

"தேங்கியுள்ள கைத்தறிஜவுளியை வாங்குவதற்காக ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுசங்கத்திற்கு ஒரு கோடிரூபாய் உடனடியாக ராஜ்ய சர்க்கார் கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதாயும், இவ்வாறுவாங்கும் ஜவுளியை விற்பதில் நஷ்டம் ஏற்பட்டால் அதை சர்க்கார் ஏற்க வேண்டு மென்றும்" கைத்தறி கமிட்டி சர்க்காரைக் கேட்டுக்கொண்டு மற்றொரு தீர்மானத்தையும் நிறைவேற்றியிருக்கிறது.

இந்தத் தீர்மானத்தின் மீது பலருக்குச் சந்தேகம் தோன்றியிருக்கிறது. தேங்கியிருக்கும் ஜவுளி யென்றால், ராஜ்யத்திலுள்ள எல்லா நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள தேக்கத்தை பற்றியதா அல்லது கூட்டுறவு இயக்கக்கிளை

வராத நெசவாளர்கள், மாஸ்டர் வீவர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமும் தேங்கியுள்ள ஜவுளியும் அத்தீர்மானத்தினுள் சேர்க்கப்பட்டிருக்கிறதாயென்ற சந்தேகமே அது. இதற்கு ராஜ்ய கைத்தறி கமிட்டித்தலைவரோ, அல்லது கட்டுப்பாடுபொருள்கள் டைரக்டரோ விளக்கம்தர முன் வர வேண்டுவது மிக அவசியமாகும்.

மொத்தத்தில் மேற்கண்டகோரிக்கைஎன்னவோ சரியானதுதான் என்பதில் எவரிடமும் இரண்டு வித அபிப்ராயமே இருக்கமுடியாது.

இதுபோன்ற உதவியை மத்தியப் பிரதேச சர்க்கார் அவர்களது மாகாண நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு செய்திருப்பதை நாம் இங்கு ஞாபகப் படுத்துகிறோம். ரூபாய் ஐந்து லட்சம் உதவி அங்குள்ள நெசவாளரின் துயர் துடைக்கும் பணியில் சர்க்கார் இறங்கியுள்ளது. அதே போல் நாம் ராஜ்ய சர்க்காரும் ரூபாய் ஒருகோடி கடன் கொடுத்து உதவ வேண்டுவதும், அவ்வர்த்தகத்தில் ஏற்படும் நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுவதும் இன்றைய நிலையில் மிக அவசியமானதாகும்.

“மார்க்கெட்டின் போக்கை அறிந்து புதிய டிசைன்கள் தயார்செய்ய சென்னை டெக்ஸ்டைல் இன்ஸ்டிட்யூட்டில் பரீட்சார்த்தமாக ஒரு பிரிவு ஆரம்பிக்க வேண்டும்” என்ற தீர்மானமும் வரவேற்கத் தக்கதே.

எல்லாவற்றிற்கும் மேலாக இன்றுள்ள நெசவாளர் நிவாரணத் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்றும், நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் சேர விரும்பும் எல்லா நெசவாளர்களுக்குமே மூலதனம் செலுத்த சர்க்கார் கடன் கொடுத்துஉதவ முன்வர வேண்டுமென்றும் சர்க்காரை கேட்டுக்கொண்டு ராஜ்ய கைத்தறி கமிட்டி வற்புறுத்தி நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை, பாதித்துள்ள நெசவாளர்கள் அனைவருமே ஏகோபித்து வரவேற்கின்றனர் என்பதில் ஐயமில்லை.

ராஜ்யத்திலுள்ள சுமார் 8 லட்சம் கைத்தறி நெசவாளர்களின் ஏகோபித்த இந்த எதிரொலியை, ராஜ்ய சர்க்கார் மிகக் கவனத்துடன் கவனித்து நிறைவேற்றி வைத்தாக வேண்டுவது கடமையாகும். ஏற்கனவேயே இக்கோரிக்கையை மாகாணத்தில் உள்ள எல்லா நெசவாளர்களின் பல் வேறு ஸ்தாபனங்களும் தொடர்ந்து வற்புறுத்தி வந்திருக்கின்றன. காரணம் அவ்வழியொன்றின் மூலமேதான் நெசவாளர்களுக்கு ஒரு புதிய ஜீவனையாவது அளிக்க முடியுமென்ற நம்பிக்கை அவர்கள் மத்தியில் வேர் விட்டிருப்பதால் தான்.

இன்று அமல் நடத்திவரும் நெசவாளர் கஷ்ட நிவாரணத் திட்டமானது வரையறுக்கப்பட்ட சில ஆயிரம் பேர்களுக்கே பிரயோஜனமாயிருக்கிறது மிகுதியுள்ள லட்சக் கணக்கான நெசவாளர்கள் இத்திட்டத்தின்படி நிவாரணம் பெற முடியாது ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளனர். எனவே நெசவாளர்கள் கஷ்ட நிவாரண திட்டத்தின் மூலம் பயன் பெற விரும்பும் சகல கைத்தறி நெசவாளிகளுக்கும் இடமளிக்கும் வகையில் இத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டியது இன்றைய நிலையில் மிக அவசர அவசிய மானதாகும் என்பதை நாமும் சர்க்காருக்கு கவனப்படுத்துகிறோம்.

தவிர, இன்று மிகக்குறுகிய அளவில் அளிக்கப்பட்டுவரும் நிவாரணம் கூட 40 நெம்பரும் அதற்குக் கீழ்ப்பட்ட நெம்பர் நூலிலும் நெசவு செய்யம் தறிகாரர்களுக்கு மட்டும்தான் உதவியாக இருந்து வருகிறது. அப்படியானால் 40 நெ. நூலுக்கு மேற்பட்ட நெம்பரில் நெசவு செய்வோர் ஏதோ சவுகரியமாக இருக்கிறார்கள் என்று சர்க்கார் எண்ணுவதுபோல் தெரிகிறது இத்திட்டத்தின் காட்டப்படும் தாரதம்மியத்தின் மூலம். எனவே இம்முறையை மாற்றி எந்த நெம்பர் நூலில் நெசவு செய்தாலும் நிவாரணம் பெறத் தகுதி வாய்ந்த எல்லா நெசவாளர்களுக்குமே நிவாரணம் அளித்தாகவேண்டுமென்பதை நாம் பலமாக வற்புறுத்கிறோம்.

கடைசியாக இன்று கைத்தறிஜவுளி தனது உள்நாட்டு மார்க்கெட்டைப் பெரிய அளவில் இழந்து நிற்பதற்கு மில் போட்டி மட்டுமின்றி தரக் குறைவும் ஒரு காரணமாக இருந்து வருவதை உணர்ந்துதான் சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இதே ராஜ்யக் கைத்தறிக் கமிட்டியானது ஒரு தர நிர்ணய மசோதாவைத் தயாரித்து சர்க்காரிடம் கொடுத்தது. எல்லோராலும் ஏக மனதாக வரவேற்கப்பட்ட அம்மசோதா, சட்டசபை முன் சமர்ப்பிக்கப் படாமலும், சட்டமாக்குவதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படாமலும் இதுவரை காலந் தாழ்த்தப் பட்டுக் கொண்டே வரப்பட்டிருக்கிறது.

கைத்தறியாளர்களின் கவலையைத் துடைப்பதில்பெரிதும் அக்கறைகாட்டும் ராஜாஜி மந்திரி சபையாவது மேற்படி தர நிர்ணய மசோதாவைச் சட்டமாக்க முன் வரவேண்டுமென விழைகின்றோம். இதைச் செய்வதின் மூலம் நல்லதொரு துணியை நாட்டு மக்களுக்குக் கிடைக்கும்படி செய்த பெருமையும், அதே காலத்தில் கைத்தறி துணிக்கு உள்நாட்டில் நிச்சயமானதொரு மார்க்கெட் தேடித் தந்த பெயரும் சென்னை சர்க்காருக்கு கிட்டும் என்பதை ஞாபகப்படுத்தி, ராஜ்ய கைத்தறிக் கமிட்டியின் சிபாரிசுகளை அமல்செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

நம் காரியாலயத்திற்கு வரும் நூல், ஜவுளி வெளிநாட்டு ஏற்றுமதிபற்றிய சர்க்காரின் பல்வேறு இலாகாகளின் அறிவிப்புகளை இப்பகுதியில் தரப்படுவதன் நோக்கமே கைத்தறி ஜவுளி வர்த்தகர்கள் தங்களதுவர்த்தகத்தைப்பற்றியும், மார்க்கட் நிலவரத்தைப்பற்றியும் நல்லதோரு முடிவுக்கு வருவதற்காகவேதான். "கைத்தறி"யில் இம்மாதம்முதல் சேர்க்கப்படும் இப்புதிய அம்சம் தொடர்ந்து வெளிவருவது நம் நேயர்களின் வரவேற்பைப் பொருத்து இருக்கிறது. எனவே, நேயர்கள் தங்களின் அபிப்பிராயத்தை தெரிவிக்குமாறு கோருகிறோம். —ஆசிரியர்.

நூல், ஜவுளி வெளிநாட்டு ஏற்றுமதி அறிவிப்புகள்.

சந்தேக நிவர்த்தி: ஏற்றுமதி கண்ட்ரோல் காரியாலய அறிவிப்பு.

இந்தியப் பருத்தியிலிருந்தும் வெளிநாட்டுப் பருத்தியிலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட நூலின் ஏற்றுமதி பற்றிய சென்னை ஏற்றுமதி வர்த்தகக் கண்ட்ரோல் காரியாலயம் 16-7-52ல் தனது 271/52 சர்க்குலர் மூலம் ஒரு விளக்க அறிவிப்பு தந்துள்ளது.

ஏற்கெனவே மேற்படி காரியாலயம் 20-6-52லும் 3-7-52லும் வெளியிட்ட அறிக்கைகள் மீது ஏற்றுமதியாளர்களிடையே ஏற்பட்டுள்ள சில சந்தேகங்களை இந்த அறிக்கை வர்த்தகர்களின் நலன் கருதி விளக்குகிறது. அறிக்கையில் காணப்படும் விளக்கங்களாவது:—

1. இந்தியப் பருத்தியிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட நூல்

(a) மில்களின் நேரடியான ஏற்றுமதி அல்லது ஏற்றுமதியாளர்களுக்கு மில்களிலிருந்து டெலிவரி:-

கீழ் விவரித்துள்ள முறையில் ஏற்றுமதிக்கான லைசென்ஸ் அல்லது ஒப்பந்தங்கள் செய்து கொண்டதற்கான அங்கீகார (ஆதரைசேஷன்) கடிதங்களோ இருந்தால்மட்டும், விலை முத்திரையிடப் பட்ட நூல் ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்படும்.

நூல் பேல்கள் "பேக்" செய்யப்பட்ட மாதம்.	அந்த பேல்களை ஏற்றுமதி செய்வதற்கு செல்லுபடியாகும் லைசென்சு வழங்கப்பட்ட அல்லது காண்ட்ராக்ட் செய்துகொள்ளப்பட்ட தேதி.
(1) 1952பிப்ரவரியிலும் அதற்குமுன்பும்.	30-6-52 க்கு முன் செய்துகொள்ளப்பட்டவை.
(2) 1952 மார்ச்சு	31-7-52 ,,
(3) 1952 ஏப்ரல்	31-8-52 ,,

ஏற்றுமதிக்கென்றே முத்திரையிடப்பட்ட நூல் ஏற்றுமதி செய்ய அனுமதி தேவைப்பட்டால், அந்த நூல் கப்பலேற்றப்பட வேண்டிய தேதியில் காலாவதி யாகாதிருந்தால் மட்டும் ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்படும்,

(b) மில்கள் அல்லாத இதர வழிகளிலிருந்து நூல் வாங்குவது, அல்லது வர்த்தகர்களிடமும் ஏற்றுமதியாளர்களிடமும் கைவசமுள்ள நூலை ஏற்றுமதி செய்வது:-

இத்தகைய இனங்களில், ஏற்றுமதிக்கான நூல், அது கப்பலேற்றப்படும்பொழுது, காலாவதியாகாதிருந்தால் மட்டும் ஏற்றுமதி அனுமதிக்கப்படும். ஏற்றுமதிக்கான முத்திரையும், விலை முத்திரையும் இடப்பட்ட இரு தரப்பட்ட நூலுக்கும் இது பொருந்தும்.

2. வெளிநாட்டுப் பருத்தியைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் நூல்

(a) மில்களின் நேரடியான ஏற்றுமதி அல்லது ஏற்றுமதியாளர்களுக்கு மில்களிலிருந்து டெலிவரி:—

கீழ் விவரித்துள்ள முறையில், ஏற்றுமதி லைசன்சு அல்லது ஒப்பந்தங்கள் செய்து கொண்டதற்கான அங்கீகார(ஆதரைசேஷன்)கடிதங்கள்இருந்து நூலும் மார்ச்'52லிருந்து ஜூன் 52'க்குள்பேல் கட்டப்பட்டு இருந்தால் மட்டுமே, விலை முத்திரையிடப்பட்ட நூல் ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்படும்

1. 31-7-52க்கு முன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தக் கடிதங்களுக்கும், வழங்கப்பட்ட லைசென்சுகளுக்கும், 1952 மார்ச்சு மாதத்தில் பேல் கட்டப்பட்ட நூல்.

2. 31-8-52க்கு முன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தக் கடிதங்களுக்கும், வழங்கப்பட்ட லைசென்சுகளுக்கும், 1952 எப்ரலிலும் அதற்குப் பின்னும் பேல் கட்டப்பட்ட நூல்.

ஏற்றுமதிக்கென்றே முத்திரையிடப்பட்ட நூல் ஏற்றுமதிசெய்ய அனுமதி தேவைப்பட்டால் அந்த நூல் கப்பலேற்றப்பட வேண்டிய தேதியில் காலாவதியாகாதிருந்தால் மட்டும் அனுமதிக்கப்படும்.

O O O

ஆஸ்திரேலியாவுக்கென அனுமதிக்கப்பட்ட நூல் ஏற்றுமதிக் கோட்டாவில் இடையூறு ஏற்பட்டு பின்னர் வேறிடங்களுக்கு திருப்பிவிடப்பட்ட நூல் ஏற்றுமதி

இது குறித்து ஏற்றுமதிவர்த்தகக் கண்ட்ரோல் காரியாலயம் 18-7-52ல் வெளியிட்டுள்ள தனது 275/52 சர்க்குலரில் கீழ் வருமாறு அறிவித்துள்ளது:—

ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்ய லைசென்சு அளிக்கப்பட்ட கோட்டாவிலுள்ள 80 நெ. நூலும் அதற்கு மேற்பட்ட நெம்பர் நூலும், 2/30க்கும் 2/60க்கும் இடையிலுள்ள நெம்பர் நூலும், ஏற்றுமதி செய்வதில் ஏற்பட்ட இடையூறுகளால் வேறிடங்களுக்கு திருப்பி விடப்பட்டவையின் ஏற்றுமதி அனுமதிக்கப்படமாட்டாது.

ஆஸ்திரேலிய கோட்டாவில் 18ம் நெம்பர், 20ம் நெம்பர் நூல்கள் சேர்க்கப்படா விட்டாலும் கூட, அவற்றின் ஏற்றுமதியும் அனுமதிக்கப்பட மாட்டாது.

O O O

தேங்கிக்கிடக்கும் நூல்: மில்களுக்கு ஏற்றுமதிச் சலுகை!

பம்பாய்டெக்ஸ்டைல் கமிஷனரின் 3-7-52 தேதிய T.C.S. II/C1, 4 & 5 நெ. அறிவிப்புகீழ்வருமாறு:-

மில்களில் தேங்கிக்கிடக்கும் நூல் ஸ்டாக்குகளைக் குறைப்பதற்காக இந்திய சர்க்கார் கீழ்க்கண்ட சலுகையை மில்களுக்கு அளித்திருக்கிறது. வெளிநாட்டுப் பருத்தியால் உற்பத்தி செய்யப்படும் 2/30க்கும் 2/60க்கும் இடைப்பட்ட நெம்பர் நூல்களையும், 80க்கும் அதற்கு மேற்பட்ட நெம்பர் நூல்களையும், 1952 மார்ச்சு முதல் ஜூன் மாதத்திற்குள் "பேக்" செய்யப்பட்டிருந்தால் அவைகளில் விலை முத்திரை குத்தப்பட்டு, ஏற்றுமதிக்கான முத்திரை இடப்படாமலிருந்தாலும் கூட, செல்லுபடியாகும் ஏற்றுமதி லைசன்சுகளின் கீழ்நேரடியாக ஏற்றுமதி செய்யவோ அல்லது ஏற்றுமதியாளர்களுக்கு விற்பனை செய்யவோ மில்கள் அனுமதிக்கப்படும்.

ஏற்றுமதியாளர்களுக்கு இந்த நூல்கள் டெலிவரி செய்யப்படுவதானல், ஏற்றுமதியாளர்கள் அவைகளை 31-8-52க்குள் "ஷிப்பிங்"செய்ய(கப்பலிலேற்ற)வசதியிருக்கும்படி போதிய அளவு முன்கூட்டியே டெலிவரிசெய்து விடவேண்டும். சொந்த லைசென்சின் பேரில் மில்களை ஏற்றுமதி

செய்வதானாலும் 31-8-52க்குள் "ஷிப்பிங்'' செய்துவிடவேண்டும் இந்தசலுகை, இந்தியப்பருத்தியுடன் வெளிநாட்டுப் பருத்தியைக் கலவை செய்து உற்பத்தி செய்யப்பட்ட நூலுக்கும், மானியமளிக்கப்படும் அமெரிக்க பருத்தியைக்கொண்டோ, அப்பருத்தியுடன் வேறு பருத்தியைக் கலவை செய்து உற்பத்தி செய்யப்பட்ட நூலுக்கோ கிடையாது.

(1) 1952 மார்ச்சில் பேல் கட்டப்பட்ட நூலை, 31-7-52க்கு முன் செய்து கொள்ளப்பட்ட காண்ட்ராக்டுகளுக்கும். (2) 1952 ஏப்ரலிலும். அதற்குப்பின்னும் பேல்கட்டப்பட்ட நூலை, 31-8-52க்கு முன் செய்து கொள்ளப்பட்ட காண்ட்ராக்டுக்கும் மட்டுமே மில்கள் ஏற்றுமதி செய்யவும், ஏற்றுமதியாளர்களுக்கு டெலிவரி செய்யவும் அனுமதிக்கப்படும்.

விலை முத்திரையிடப்பட்ட நூல், காலாவதியான பேல்களை உடைத்து மறு கட்டு போட தேவையான உத்தரவின்றியே ஏற்றுமதி செய்யப் படலாம்.

O O O

ஜவுளி ஏற்றுமதியாளர்கள் 'அதிகப்படியான ஷிப்பிங்' பில் அனுப்பவேண்டியதில்லை

எக்சேஞ்ச் கண்ட்ரோல் தேவைகளுக்காக ஏற்றுமதியாளர்கள் அதிகப்படியான 'ஷிப்பிங் பில்' லும் சமர்ப்பிக்கவேண்டும் என்று 1-5-52ல் போடப்பட்டிருந்த உத்தரவை அமுல் நடத்துவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே தாராள லைசென்ஸ் காலம்வரை அதிகப்படியான "ஷிப்பிங் பில்'' வேண்டியதில்லை என்று ஏற்றுமதி வர்த்தக கண்ட்ரோல் காரியாலயத்தின் 8-7-52ம் தேதி யிட்ட 262/52 அறிக்கை கூறுகிறது.

O O O

நேபாளத்திற்கு ஜவுளி ஏற்றுமதி பற்றியது

மெல்லிய, மிக மெல்லிய, நடுத்தர, மோட்டா ரகத்துணிகளை நேபாளத்திற்கு ஏற்றுமதி செய்வதை தாராளமாக லைசன்ஸ் மூலம் அனுமதிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. மெல்லிய, மிக மெல்லிய ரகங்களுக்கு 30-9-52 வரையிலும், மோட்டா, நடுத்தர ரகங்களுக்கு 31-8-52 வரையிலும் ஏற்றுமதி செய்ய லைசன்சுகளின் ஆயுள் நீடித்திருக்கும்.

நேபாளத்திற்கு ஜவுளி சப்ளை செய்யப்படுவது நேபாள சர்க்காரின் இறக்குமதி லைசன்ஸ் திட்டத்தால் நிர்ணயிக்கப்படுமாகையால், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்ய, நேபாளத்தில் இறக்குமதிலைசனென்ஸ் வைத்திருப்பவர்களால் குறிப்பிடப்படும் நாமினிகளுக்குமட்டும் லைசன்ஸ் வழங்கப்படும்.

சாய, அச்சுத் தொழிலில் நீண்ட நாள்
அனுபவமுள்ளவர்களால் ஆரம்பிக்கப்படுவது!

ஜெமினி பிரிண்டிங்

(வெகு விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது)

கைத்தறி & மில் துணி, சில்க் ஆகியவைகளை கண்கவர் வர்ணங்களில், அற்புதமான டிசைன்களில். குறைந்த சார்ஜில் சேலை & சீட்டி தினுசுகள் மெஷின் பிரிண்ட்செய்து தருகிறோம்.

: உரிமையாளர்கள் :

S. DORAISWAMY MUDALIAR & CO.,

CLOTH FINISHING PRODUCERS,

FORT, :: ERODE.

1. நாமினிகள் இந்தியர்களாக இருக்க வேண்டும். அவர்கள் வருமானவரி வெரிபிகேஷன் (எக்ஸம்ஷன்) சர்டிபிகேட் ரிஜிஸ்டர் நம்பர் உள்ளவர்களாயிருக்க வேண்டும்.

2. நாமினிகள் அசல் இறக்குமதி லைசன்சுகளைத் தங்கள் வசம் வைத்திருக்க வேண்டும், குறிப்பிட்ட நமூனாவில் விண்ணப்பம் எழுதி, ஏற்றுமதி லைசன்சுக்கான கட்டணத்தை சர்க்கார் கஜானாவில் கட்டி அதற்கான ரசீதையும் சேர்த்து, ஏற்றுமதி கண்ட்ரோல் ஆபீசுக்கு வரும்போது, ஆபீஸ் பரிசிலனைக்காக இறக்குமதி லைசன்சைச் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் இறக்குமதியாளரிடமிருந்து தங்களை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்பவர்களாக நியமித்த அதிகார கடிதத்தையும் சமர்ப்பிக்கவேண்டும்.

3. பகிரங்க மார்க்கெட்டில் வாங்கப்பட்ட விலைமுத்திரையிட்ட ஜவுளிகளும் நேபாளத்திற்கு ஏற்றுமதிசெய்யப்படலாம். அத்தகைய ஜவுளிகள் எந்தமில்களில் உற்பத்தியானவை என்பதை அறிவிக்க வேண்டும். ஒவ்வொரு மில்லுக்கும் தனித்தனியாக விண்ணப்பம் எழுதப்படல் வேண்டும். இது மில்களிலிருந்து வாங்கப்பட்ட ஜவுளிகளுக்கும், பகிரங்க மார்க்கெட்டில் வாங்கப்பட்ட ஜவுளிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் அதற்கான சர்க்கார் கஜானா ரசீது சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

4. போலி நைஸ்ரகங்கள், மினரல் காக்கி, வடிகட்டும் துணி, நடுத்தர மோட்டாரக குடைத்துணி, கொசுவலைத்துணி ஆகியவை விஷயத்தில் இந்த அறிக்கையின்படி வழங்கப்படும் லைசன்சுபொருந்தாது.

○ ○ ○

திபேத்திற்கு ஜவுளி ஏற்றுமதி பற்றியது

நைஸ், மிக நைஸ் ரகத்துணிகளும், மோட்டா நடுத்தர ரகத்துணிகளும் திபேத்திற்கு அனுப்ப தாராள லைசென்ஸ் இப்போது அனுமதிக்கப்படுகிறது. இது 31-12-52 வரைக்கும் உள் நாட்டு விநியோக திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும். லைசென்சுகள் 31-12-52 தேதி வரைதான் செல்லுபடியாகும். அதற்குமேல் காலவரை எக்காரணத்தாலும் நீடிக்கப்பட மாட்டாது.

காளிம் போங்கிலிருக்கும் திபேத்திய பொதுநல உறவு அதிகாரியால் ஆதரசேஷன் லெட்டர் கொடுக்கப் பட்டுள்ளவர்களின் கமிஷன் ஏஜண்டுகளாக இருக்கும் ஏற்றுமதி யாளர்களுக்கு மட்டும் இந்த லைசென்சுகள் வழங்கப்படும்.

இந்தக் கமிஷன் ஏஜண்டுகள் இந்தியர்களாயிருத்தல் வேண்டும். அவர்களிடம் வருமானவரி வெரிபிகேஷன் ரிஜிஸ்தர் நம்பரும் இருக்கவேண்டும்.

லைசென்ஸ் வழங்குவதற்காக, இவர்கள் குறிப்பிட்ட நமூனாவில் விண்ணப்பம் எழுதி அதையும், தேவையான சர்க்கார் கஜானா ரசீதுடனும். ஆதரைசேஷன் கடிதத்தின் அசலை எக்ஸ்போர்ட் கண்ட்ரோல் ஆபீஸில் பரிசீலனைக்காக சமர்ப்பிக்க வேண்டும்.

திபேத்திய பொது உறவு அதிகாரியால் நியமனம் ஆன நபரிடமிருந்து, இந்த கமிஷன் ஏஜண்டுகள் துணி ஏற்றுமதி செய்ய நியமிக்கப்பட்டுள்ளதற்கு அத்தாட்சியாக கடிதத்தையும் சமர்ப்பிக்கவேண்டும். மற்ற நிபந்தனைகள் நேபாளத்திற்கு ஏற்றுமதி செய்வதற்கான ஷரத்துகளேயாகும்.

○ ○ ○

இந்தியாவுடன் வர்த்தகம் நடத்த செக்கோஸ்லோவேகியா கம்பெனியின் விருப்பம்,

செக்கோஸ்லேவேகியாவிலுள்ள ஏற்றுமதி இறக்குமதியாளர்களான சென்ட்ரோ டெக்ஸ் லிமிடெட் கம்பெனி கீழ்காணும் கடிதத்தை சென்னை மாகாண கைத்தறி ஜவுளி வர்த்தகர்கள் சங்கத்திற்கு எழுதியுள்ளனர்.

29-7-52 தேதி எழுதப்பட்ட O13/13M/EN நெ. உள்ள அக்கடிதம் சென்னை மாகாண கைத்தறி ஜவுளிவர்த்தகர்சங்கம் 12-6-52 எழுதிய கடிதத்திற்கு பதில் வரும் கடிதம் கூறுவதாவது:—



எங்கள் கம்பெனி, எங்கள் நாட்டில் (செக்கோஸ்லோவேகியா) உற்பத்தி செய்யப்படும் எல்லாவிதமான ஜவுளி சரக்குகள், ஷூக்கள், தோல்கையுறைகள், பிளாஸ்டிக் சரக்குகள், எண்ணைத் துணிகள், (ஆயில் க்ளோத்) முதலியவைகளின் ஏக ஏற்றுமதியாளர்களாகும். இந்தியாவே பெரிய அளவுக்கு, ஜவுளி உற்பத்தி செய்கிறதெனவும் நாங்களறிவோம். எனினும் விசேஷமான அம்சங்களுடன் கூடிய பொருள்களை நாங்கள் உங்களுக்கு சப்ளை செய்ய முடியும். முக்கியமாக வேலை நுணுக்கமுள்ள ஜவுளிகள், பெல்ட் (felt), பிளாஸ்டிக், இதர இதுபோன்ற சரக்குகள் உங்கள் சங்க அங்கத்தினர்களில் பலருடைய கவனத்தைக் கவரக்கூடியதாக இருக்கும். தங்கள் விரிவான விசாரிப்பு கிடைத்தால் நன்றியுடையவர்களாக இருப்போம். விரைவான பதிலை எதிர் பார்க்கிறோம்.

O O O

டாலர் பிரதேசங்களுக்கு ஜவுளி ஏற்றுமதி

டாலர் பிரதேங்களுக்கு பருத்தி ஜவுளிகளின் ஏற்றுமதி குறித்து 29-7-52 ந்தேதி 288/52ம் நெ. சுற்றறிக்கையில் ஏற்றுமதி வர்த்தகக் கண்ட்ரோல் காரியாலயம் கீழ்வருவாறு அறிவித்துள்ளது:-

31-12-52 வரையிலும் டாலர் பிரதேசங்களுக்கு பருத்தி ஜவுளிகளின் ஏற்றுமதி தாராளமாக அனுமதிக்கப்படும். தாராள லைசென்சு திட்டத்தின் கீழ் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள ரகங்களுக்கே ஏற்றுமதி அனுமதிக்கப்படும். தாராள லைசென்சு திட்டத்தின் கீழ் லைசென்சு பெறுவதற்காக குறிப்பிடப்பட்டுள்ள முறையில் ஏற்றுமதி மனுக்கள் செய்து கொள்ளப்படவேண்டும்.

கீழ்வரும் நாடுகள் டாலர் பிரதேசங்கள் என அழைக்கப்படுகின்றன.

அமெரிக்காவும் அதன் ஆதிபத்தியத்திலும், கண்காணிப்பிலும் உள்ள பிரதேசங்கள். கானடா, நியூப்வுண்ட்லேண்ட், பிலிப்பைன், பொலீவியா, கொலம்பியா, கோடா-ரிகா, மெக்சிகோ, பனமா, க்யூபா, டொமினிகன் குடிய்ரசு, ஈக்வடார், கௌதமாலா, ஹைட்டி. ஹோண்டுராஸ்; சால்வடார், வெனிசுலா, லிபெரியா.

31-8-52க்குப்பின்னருங்கூட ஏற்றுமதி லைசென்சுகள் பெறலாம். ஆனால் கப்பலேற்றுவதற்கான கடைசீதேதிமட்டும் 31-12-52 ஆகயிருக்கும். எக்காரணத்தாலும் அது நீடிக்கப்படமாட்டாது.

O O O

இந்திய எகிப்து வர்த்தக ஒப்பந்தம்.

இந்திய-எகிப்து வர்த்தகஒப்பந்தம் குறித்து ஏற்றுமதி வர்த்தகக்கண்ட்ரோல் காரியாலயம் 28-7-52ல் விடுத்துள்ள 296/52ம் நெ. சுற்றறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

29-2-52 உடன் முடிவு பெற்ற இந்திய-எகிப்து வர்த்தகஒப்பந்தம் மீண்டும் ஒருவருஷத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்படுகிறது. 1-3-52ந் தேதியிலிருந்து ஒரு வருஷம் வரை ஒப்பந்தம் அமுலிலிருக்கும். ஒப்பந்தத்தின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் பொருளகளில் 500 டன் எடையுள்ள கிரே, நைஸ், அதிக நைஸ் ரக பருத்தி ஜவுளிகளும் அடங்கியுள்ளன.

கைத்தறி

3-வது ஆண்டு தீபாவளிமலர்

அறிவிப்பு

நேயர்களே! வரும் அக்டோபர் இதழுடன் "கைத்தறி"க்கு மூன்று ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன. அதையொட்டி அக்டோபர் (ஐப்பசி) இதழை தீபாவளி மலராகவும், ஆண்டுமலராகவும் வெளியிட முடிவு செய்துள்ளோம். மலர், சென்ற ஆண்டு தீபாவளி மலரைக் காட்டிலும் பல புதிய அம்சங்களுடன் நேயர்களின் கரங்களில் தவழும்.

எனவே, அடுத்த இதழ் 12 பக்கங்களுடன் இரண்டணா விலையில்தான் வெளிவரும். என்றும்போல் அனைவரின் நல்லாதரவையும் தரக் கோருகிறேன். —ஆசிரியர், "கைத்தறி"

சகோதரியின் கடிதம்!

★

[ஈ. கு. விவேகானந்தன்]

அன்புத்தம்பிக்கு, ஆசீர்வாதம்.

இப்பவும் நீ சென்னையிலிருந்து எழுதிய கடிதம் கிடைத்தது விபரம் தெரிந்தேன். இந்த வருடம் நீ காலேஜ் படிப்பில் பி. எஸ். ஸி. தேறியிருப்பது கேட்க மிக்க மகிழ்ச்சியடைந்தேன். உன் அத்தானும் சந்தோஷப்பட்டார். நம் அத்தை மகள் குமுதினி கூட இந்த வருடம் பத்தாவது வகுப்பில் பாஸாகி விட்டாளாம். கவனம்; அவளை உனக்காகவே வளர்த்து வருகிறார்கள். ஜாக்கிறதையாக படித்து பட்டம் பெறு.

என் இப்படி எழுதுகிறேன் என்றால் இன்றைய காலேஜ் மாணவர்களைப்பற்றி எனக்கும் கொஞ்சம் தெரியும். காலத்தை வீணாகக் கழிப்பதுதான் அவர்களுக்குக் களிப்பு. சினிமா பார்ப்பது சிறுவயதுப்பெண்களை கண் சிவக்கப் பார்ப்பது, சிற்றுண்டி சிறக்கச்சாப்பிடுவது, "சில்லரை"ப் பத்திரிக்கைகளைப்படிப்பது ஆகியவைகளில் தான் அவர்களுக்கு சந்தோஷம். இவைகளில் நீ ஏதாவது கடைப்பிடித்துவந்தால் இந்த தபால் கண்டவுடனேயே விட்டுவிடு. அதற்காக என்னைக்கோபித்துக் கொள்ளாதே. அப்பா உன்னைத்தான் நம்பியிருக்கிறார். நம் குடும்பக் குல விளக்கு நீதான்.

தவிர என் குடும்பநலன்களைப் பற்றிக் கேட்டும் எழுதியிருக்கிறாய். என் குடும்பக் கஷ்டங்களை இப்படி அப்படி என்று எழுதி வர்ணிப்பதைவிட பொதுவாக உனக்கு சுருக்கமாக ஒரேவரியில் எழுதிவிடுகிறேன். நெசவாளர்களை மணந்துக் கொண்டால் பெண்கள் அவர்கள் சுக வாழ்வை முதலில் மறந்துவிட வேண்டும். கல்யாணத்தின்போதே பஞ்சம் என்ற பாலைவனத்தி[illegible] பணம்செய்யப்போகிறோம் என்பதையும், தரித்திரம் என்ற தடாகத்திற்குப் போகப் போகிறோம் என்பதையும், வறுமை என்ற வறண்ட வயலை உழப்போகிறோம் என்பதையும் முடிவுக்கட்டிவிட வேண்டும். அல்லது பெற்றோர்கள் கிணற்றில் தள்ளிவிட்டார்கள் என்ற முடிவிற்காவது வந்து விட வேண்டும்.

நான், கல்யாணத்தின் போது அப்பாவை எவ்வளவோ வேண்டினேன்; அப்பா கேட்கவில்லை, பணம் அவருடைய கண்ணை மறைத்து விட்டது. என் கல்யாணத்தின் போது உன் அத்தான் பெற்றோர்களுக்கு நிறைய தறியிருந்தது. அப்போது நாலுக்கு "டிமாண்டான" காலம். தறிக்கார்டு என்றால் ஒரு கலெக்டர் சம்பளம் அப்போது. தறிக் காரர்களுக்கு நன்றாக சதைகூட வளர்ந்திருந்தது. எனவே பணமும் எல்லோரிடமும் தண்ணீர் படாத பாடு பட்டது. அப்பாவும் என்னை உன் அத்தானுக்கு பிடிவாதமாக திருமணம் செய்வித்தார். பின்பு சொல்லவேண்டுமா? காலச் சக்கரம் ஒரேமாதிரி மனிதர்களை வைத்திருக்கிறதா? என் மாமனார் வீட்டில் பணத்தின் மவுசு மங்கியது. நானும் உன் அத்தானும் தனிக்குடும்பம் நடத்தக்கிளம்பினோம். தரித்திரமும் வறுமையும் சேர்ந்து எங்களோடு குடித்தனமேறியது. உன் அத்தான் இரண்டுமூன்று தறிகளைப்போட்டுக்கொண்டு நாய் படாத பாடுபடுகிறார். சோற்றுக்கு வழியைக் காணோம். என்னை அலங்கரித்துக் கொண்டிருந்த நகைகளெல்லாம் பஞ்சத்திற்குப் பலியாயின. இந்த லட்சணத்தில் குழந்தைக் குட்டிகளைப் பெறுமலிருக்க முடிகிறதா? வருஷமா[illegible] இவ்வளவுக்கும் காரணம் என்ன என்கிறாயா?

இந்தப்பாழும் ஜவுளிமார்க்கெட்தான்! ஒருசமயம் விலைகள் ஏறுகின்றன. அதை நம்பி லாபம் வரும் என்று வியாபாரிகள் முண்டியடித்துக் கொண்டு வாங்குவார்கள். அடுத்த க்ஷணமே ஏறின விலையிலிருந்து இரண்டு மடங்கு இறங்கும். வியாபாரிகள் பேந்த பேந்த விழிப்பார்கள். உன் அத்தான் முகத்தில் வெளிச்சம் காணாது. என் முகத்தில் ஈயாடாது. விலைகள் ஏறும்போல் தெரிந்தால் உன் அத்தான் கொண்டுபோகும் சரக்குகளை வியாபாரிகள் விழுந்தடித்துக் கொண்டு கூப்பிட்டு வாங்குவார்கள். விலைகள் இறங்கி விட்டாலோ உன் அத்தான் ஒவ்வொரு கடையாக ஏறி யிறங்குவார். வியாபாரிகள் முகங் கொடுத்தும் பேசமாட்டார்கள். என்ன செய்வது? அவர்கள் குறை அவர்களுக்கு!

இவ்வளவு கஷ்டங்களுக்கும் நம் அப்பாவிடம் உதவி கோரினால் கையை விரிக்கிறார். அவருடைய வரும்படி பட்ஜெட்டில் துண்டு விழுவதாக கணக்கு ஒப்பிக்கிறார். நீ நினைக்கலாம். ஜவுளி வியாபாரம் வெறும் ஜம்பமான வியாபாரம்தானே என்று. அது இன்று ரொம்பசரி. அப்பாவைப்பாரேன். முந்தியிருந்ததற்கு இப்போது எவ்வளவோ இளைத்துவிட்டார். கடைவாடகை, ஆட்கள் சம்பளச் செலவு, வருமான வரி, விற்பனை வரி, வீட்டுச்செலவு இவைகளுக்கே மாதமானால் எவ்வித வருமானமும் இல்லையே என்று ஒப்பாரி பாடுகிறார். துணி விலைகளெல்லாம் இறங்கிக்கொண்டே போகிறதாம். அதில், நீ வேறு மாதமானால் ஐநூறு ரூபாய் அனுப்பச் சொல்லுகிறாயாம், அப்பாவுக்கு எந்தப்பக்கம் திரும்பினாலும் நஷ்டம் மேற்படுகிறதாம். கடைவீதியில் வியாபாரிகளிடம் சரக்கு வாங்கினாலும் முதல் போகிறதாம். சொசைட்டிகளில் வாங்கினாலும் நஷ்டம் என்ற நதி வெள்

[6-ம் பக்கம் பார்க்க]

உண்மையில் அவன் திருடனல்ல; ஆனால் இச்சமூக சூழ்நிலைதான் அவனை அவ்வாறு செய்யத்தூண்டுகிறது! அதன் விளைவுதான்.........

பசி!

[ச. குணவரசு.]

கணவன் கூறுகிறான்:

இன்று சுதந்திர தினவிழா. நகரம் முழுதும் ஒரே ஆர்ப்பாட்டமாக இருக்கிறது. வாணவெடிகளும், வாழ்த் தொலிகளும் வானை முட்டுகின்றன. இசைத்தட்டுகளின் முழக்கமும், இன்னிசைக் கீதமும் ஏழை மக்களின் காதுகளில்கூட நுழைந்து, அவர்கள் உள்ளத்தில் எழுச்சியையும் இன்பத்தையும், ஏன்? ஏமாற்றத்தையும் ஏக்கத்தையும்கூட உண்டுபண்ணுகின்றன.

ஆனால், இந்த சுதந்திர தினவிழா நெசவாளர்களாகிய எங்களுக்கு மட்டும் விலக்கு. ஏன்? எங்கள் வாழ்க்கை அத்தகைய நிலையிலிருக்கின்றது. கரைந்து தேய்ந்திருக்கும் மண்சுவர்கள், அதற்குமேலே வேய்ந்திருக்கும் கிழிந்த ஓலை அடுக்குகள், அதிலிருக்கும் துவாரங்களின் வழியே, வானில் இரவில் சுடர் விட்டுக் கொண்டிருக்கும் நட்சத்திரக் கூட்டங்களெல்லாம் நன்றாகத் தெரிகின்றன. இவ் வோட்டைக் குடிசையில்தான் நானும் எனது மனைவி மக்களுமாகச் சேர்ந்து மூன்றுஉயிர்கள் நடை பிணங்களாக வசிக்கிறோம்.

நாங்கள் செய்துவருகிற தொழில் நெசவு. பொதுவாக தொழில் என்பது மாந்தர், அவரவர்கள் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்வதற்கும், அந்தந்த நாட்டு உயர்வின் அளவை உலகிற்கு அறிவிக்கவும் செய்யக்கூடிய பல் வகைப்பட்ட கலைகள். ஆனால், நாங்கள் செய்யும் கலை இருக்கிறதே, கைத்தறி நெசவுத் தொழில், அது மட்டும் அப்படிப்பட்டதல்ல. எங்கள் வாழ்வு நசுங்குவதற்காக - நசுக்கப்படுவதற்காக நாங்கள் அனுபவிக்கும் தண்டனைகளே அவை. நாங்கள் அனுதினமும் அனுபவிக்கும் துன்பங்கள் கண்ணீர் விடுமளவுக்குக் கொடுமை வாய்ந்தது. உண்மையிலேயே கூறுகிறேன், நெசவாளர்கள் படும் துன்பங்களைக் கண்ணால் கண்டவர்கள், கருத்திலாவது எண்ணிப்பார்த்தவர்கள், அறிவால் உணர்ந்தவர்கள் ஆகியோர்களும்கூட இரங்கிக் கண்

என் மனைவி போதிய உணவில்லாமல் தகுந்த போஷிப்பு இல்லாமல் பாதி ஆளாக மெலிந்திருக்கிறாள். என் அருமைக் குழந்தை நன்றாகஉண்டு உறங்கி ஓடித்திரிந்து வளர வேண்டிய வயதில் தினமும் இரண்டு வேளைக்குக்கூடக்கஞ்சிசரியாகக் கிடைக்காமல் கை கால்கள் மெலிந்துவிட்டன; எப்பொழுதும் கண்ணீர் சிந்திக்கொண்டிருந்ததால் கண்கள்சிவந்து, நாக்குஉலர்ந்து, ஏக்கமெடுத்த உருவமாகக் காட்சியளிக்கிறது. நான் தோல் மூடிய எலும்புக் கூடாக இருக்கிறேன். என் வீட்டில் சமையல் செய்து இரண்டு நாளாகின்றது; இன்றும் சமைப்பதற்கு வீட்டில் எதுவுமே இல்லை. எப்படி இருக்க முடியும்? நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் கொடுத்த நூலும் அதற்கு கிடைத்த கூலியும் மாதம் பாதி நாட்களுக்குள்ளேயே தீர்ந்துவிடுகிறதே! மீதி நாட்களை நாங்கள் எவ்விதம் போக்குவோம்?

நானும் எனது மனைவியும் வேண்டுமானால் பசியைப் பொறுத்துக்கொண்டு வதைபட்டுக்கொண்டே இருக்கலாம். ஆனால், அந்தோ, என் அருமைக் குழந்தை கஞ்சித் தண்ணீரை மட்டும் இன்றையஉணவாக அருந்தியிருக்கிறது, இதுஎப்படி பசியைத்தாங்கும்....? பசியின்கொடுமைதாங்க மாட்டாமல் என் குழந்தை அலறுகின்றதே....! அக்குழந்தையின் கண்களிலிருந்து வடியும் கண்ணீர் நெருப்பைக்காட்டிலும் உஷ்ணமுடையதாகவல்லவா இருக்கின்றது! என் குழந்தை என் முகத்தை ஒரு முறையும் தன் தாயின முகத்தையொருமுறையுமாக மாறி மாறிப் பார்த்து, ஏங்கியேங்கி அழுகிறதே....! நான் என்ன செய்யமுடியும்....? குழந்தையின் மேலுள்ள அன்பு என்னை வந்து தாக்குகின்றதே....! "அன்பு" என்று சொல்லக்கூடிய அருமையான இம் மூன்றெழுத்துக்கள், சமயத்தில் எத்தகைய கொடிதாயிருக்கின்றன....! இந்த அன்பு மட்டும் என் மனதில் இல்லாவிட்டால், என் மனைவி மக்களைத் துறந்து என்றோ ஊரைவிட்டு ஓடியிருப்பேன்; அல்லது இறந்திருப்பேன்!

நீ பெற்றகுழந்தை - கண்ணே,மணியே, கற்கண்டே, தேனே என்று அன்போடு நீ அணைத்த உன் குழந்தை - உன் நலமே தன் நலமென்றெண்ணி உழைத்த உத்தம குணவதியான உன் மனைவியாகிய இவர்களெல்லாம் பசித்திருக்க, நீ அதைப் பார்த்துக்கொண்டு சகித்திருப்பதா....? உனக்கு ஆண்மையும் ரோசமும் இல்லையா....? உனக்கு அவர்கள் மீது உண்மையான அன்பிருக்குமேயானால் செல்; உடனே செல்! என்ன பாடு

ர்கள் பசியைத் தணி; அவர்களுக்கு வயிறார உணவு கொடு; அவ்விதம் செய்யவில்லையாயின் நீ ஒரு தந்தை என்று சொல்லிக்கொள்ள அருகதையற்றவன்! குழந்தை பசியால் துடி துடிக்க, நீ கோழை போல் மருண்டு மருண்டு விழிப்பதா....?'' என்று என் உள்ளத்தில் அன்பு வந்து தாக்கிக் கேள்வியை எழுப்புகிறதே! நான் என்ன செய்வது? பாழும் பஞ்சைத் தொழிலான நெசவுத் தொழில் தவிர வேறு தொழில் கற்கவில்லையே.... அந்தோ! கேட்பாரற்ற இத்தகைய கேவல நிலைக்கு - ஆதரிப்பாரற்ற அனாதை நிலைக்கு, பாதுகாப்பற்ற பாரி நிலைக்கா நெசவுத் தொழில் வர வேண்டும்....?

அந்தோ....! என் அருமைக் குழந்தையின் அழகிய மலர்போன்ற கண்கள் அழுதழுது நெருப்பைப்போற் சிவந்து விட்டனவே. அச்சிவந்த கண்களிலிருந்து வடியுங் கண்ணீர், என் பார்வைக்கு ஈட்டிபட்ட இடத்திற் பெருகும இரத்தம் போன்றல்லவா தெரிகிறது! ஆ....' என் உள்ளத்தில் மறுபடியும் அக்குழந்தையின் பேரிலுள்ள அன்புவந்து தாக்குகிறதே; கேள்விகளை எழுப்புகிறதே; உள்ளத்திற் கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றதே! குழந்தையின் கண்களிலிருந்து வடியும் கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்றையும் உலையில் அடித்த ஈட்டிகளாக்கி என் நெஞ்சைப் பிளக்கிறதே! நான் இதுகாறும் கருத்தில் வைத்துக் காப்பாற்றிவைத்திருந்த சத்தியம், நேர்மை, அத்தனையும் தவிடு பொடியாக்குகிறதே! என் மனம் கொதிக்கும் எரிமலையாக, கொந்தளிக்கும் கடலாக, எதற்கும் அஞ்சாத இரும்பு-நெஞ்சமாக மாறுகிறதே!

என் கண்களுக்கு, குழந்தையின் கண்ணீரும், அதனுடைய பசியுந்தவிர வேறு எதுவுமே தெரியவில்லை. என் மதியில் இருளடைந்து காணப்படுகிறது; என் இதயம் முழுதும் ஓரே கொதிப்பாக இருக்கிறது; என் நாசியின் பெரு மூச்சு கரைகளை அழித்துக்கொண்டு செல்லும காட்டாறு போற் சீறுகின்றது. என் உடலில் ஒவ்வொரு துளி ரத்தமும் சூடேறுகின்றன; கை கால்கள் பட படக்கின்றன; உடலில், அருகு நுனி நனைத்த பனித்துளிகள் போல் வியர்வைத் துளிகள் அரும்பி நிற்கின்றன.

என் கால்கள் வீட்டை விட்டுக் கிளம்பி வேகமாக நடந்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிற்கின்றன; கண்கள் சுற்றுமுற்றும் சுழல்கின்றன. அடுத்த கணம் ஓர் கோட்டைச் சுவர் ஏறிக் குதித்தேன். இந்த வீடுதான் இவ்வூரிலுள்ள பணக்காரர்களில் பெரிய பணக்காரர் வீடு. வீட்டுக்குள்ளிருக்கும் நிழல்களில பதுங்கிப் பதுங்கி நடந்தேன். பட்டு மெத்தையின் மீது ஓர் குழந்தை நன்றாகத் [illegible]க் கொண்டிருந்தது. குழந்தையின் கழுத்தில் ஓர் வைரப்பதக்கம் பளிச்சிட்டது, அடுத்து பட்டுப் புடவைகளும், விலைமதிப்புள்ள இதர பொருள்களும் இருந்தன. ஆனால் இவைகளெல்லாம் என் கருத்தை ஈர்க்கவில்லை, அவைகள் எனக்குத்தேவையுமில்லை. எனது குடும்பத்திலிருப்பது பசி; அதைத்தணிக்க வேண்டியது அரிசி.

இச் செல்வந்தருடைய வீட்டில் தேவைக்கு மேலேயே நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், எனக்கு வேண்டியது அவ்வளவும் அல்ல; என் குடும்பம் முழுதுக்கும் ஒரு படி அரிசி தாராளம். அவிழ்த்து வைத்திருக்கும்

வாழ வழி உண்டா?

— சு. அரசு. —

உயர் மலையைப் பிளந்து கிடு
பள்ள மாக்கி
உலகினுக்கே பொற்குவியல்
அள்ளித் தந்து
கயல் வாழும் கடல்குளித்து
முத்தெடுத்துக்
காரிருள் சூழ் கானகத்தை
களனியாக்கி
வயல் மேவும் நாடுசெய்து
வறுமை தீர்த்து
வளங்கண்ட பாட்டாளித்
தோழனின்று
புயலிடையே சிக்குண்ட
பஞ்சினைப் போல்
புல்லர்களின் வஞ்சனைக்கு
அடிமைப்பட்டான்!

நல மிழந்தான் பாட்டாளி
நடைப்பிணமாய்
நங்கூர மில்லாத
ஓட மானன்
கலமேறிக் கடல் கடந்தான்
கஞ்சிக்காகக்
கால மெலாம் உழைத்தோய்ந்தான்
கடும் பசியால்
பல மிழந்தான் பஞ்சையென்ற
பட்டம் பெற்றுப்
பரதவித்து அல்ல லுற்றான்
பதர்களாலே
உலகோங்க உழைக்கும் பாட்டாளி
நாட்டில்
உயர்வெய்தி வாழவழி உண்டோ
சொல்வீர்!

கோணிப்பை ஒன்று இருந்தது; என் மேல்துண்டைத் தரையில் விரித்து அதிலிருந்து சுமார் ஒரு படி அரிசி அளவு அள்ளிப் போட்டேன். அப்போது என் உள்ளம் அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லிமுடியாது! ஆனால், அடுத்தகணம் என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியாது. பொட்டணத்தைக் கட்டிக்கொண்டு மறுபடிக் கள்ளத்தனமாக வெளியில் வந்து உற்சாகத்தோடு கோட்டைச் சுவரில் ஏறினேன்; அவ்வளவுதான்! என் பிடறியில் ஓர் பலமான . அடி விழுந்தது; வலி தாங்க முடியாமல் சுவர் மீதிருந்தவாறே பூமியில் நன்றாக அறையும்படி விழுந்தேன்! மற்றோர் அடி மார்பு மீது, விழுந்தது; உடலின் வேதனை அளவுக்கு மீறியதால் கண்களிருண்டுவிட்டன! நான் எனது உணர்வை இழந்தேன்; பின் என்ன நடந்ததென்று எனக்குத் தெரியவில்லை!

நான் உணர்வு வந்து கண் விழிக்கும்போது, ஒரு கெட்டியான தரையில் படுத்திருப்பதாகத் தோன்றிட்து. உடல் முழுதும் நெருப்பிற் போட்டதுபோல் வேதனை எடுத்து உடலில் சில இடங்களில் காயமேற்பட்டிருந்தன. அதிலிருந்து சில இரத்தத் துளிகளும் தரையிற் சிந்திக்கிடந்தன. மதில்போன்ற சுவர்களும் கரடு முரடான, இரும்புக் கம்பிக்கதவுகளும், நான் இருப்பதைச் சிறைகூடம் என எனக்கு அறிவித்தன.

மனைவி கூறுகிறாள்:

அவர் - என்னுடைய பாண்டியன்; கைதியாக்கப்பட்டு இன்றுடன் மூன்று தினங்களாகின்றன. என்னருமைத் தாய்மார்களே! எத்தகைய அநீதி என்று பாருங்கள். அவர் திருடினார் என்பதற்காக நாங்கள் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும்? எங்களை ஏன் பட்டினி போட்டு வைக்க வேண்டும்? அவர் வெளியில் இருந்தாலாவது எங்கு சென்றாகிலும் எங்கள் குடும்பப் பசியைத் தணிப்பார். இப்பொழுது எங்கள் பசியை யார் போக்குவது? நானும் எங்களருமைக் கண்மணி மூன்று வயதுப் பாலகனும் என் செய்வது? எங்களை இந்த நிலையில் விட்டு விட்டு அவரைமட்டும் சிறையில் தள்ளி விட்டார்களே! அவருந்தான், சிறை செல்லும்படியாக என்னகுற்றம் செய்தார்; ஒரு வேளைப் பசியைப்போக்கும் அளவு உணவுதானே எடுத்தார். அதுவுங்கூட அச் செல்வந்தரின் வீட்டில் தேவைக்கு மேல் இருக்கத்தானே எடுத்தார்....! தண்டவாளத்தைத் துண்டித்தவர்கள், ஓடும் ரயிலில் கொள்ளையிட்டவர்கள், அஞ்சலலுவலகங்களை தீக்கிரையாக்கியவர்கள், லஞ்சத்தால் லட்சாதிபதியானவர்கள், கஞ்சா முதலிய போதைகளை கருப்புச் சந்தையில் நடத்தியவர்கள், கள்ள விலைக்கு விற்றவர்கள், பற்றாக்குறை இருக்க உணவைக் கடத்தியவர்கள், கணக்கு மோசடி செய்தவர்கள், சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய வரியைச் சாப்பிட்டவர்கள், சட்டத்தை மதிக்காது சரக்குகளைப் பதுக்கி வைத்தவர்கள்........ ஆகியோர்களெல்லாம் நாட்டில் மனிதர்களாக நடமாடித்திரிகிறார்களே....! அவர்களெல்லாம் செய்யாத பெரும் குற்றத்தை இவர் என்ன செய்துவிட்டார்? மேலும் அவர், திருடவேண்டுமென்று கனவில்கூட நினைப்பவர் அல்லவே; அவருடைய அன்பும் உயர்ந்த அறிவும் எனக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் நெசவாளர்கள் எங்களுக்கென்றே பஞ்சம் வந்திருக்கிறது. நாங்கள் உழைக்கச் சம்மதிக்கிறோம், எங்களுக்கு வேலை கொடுப்பவர்கள் இல்லை; தப்பித்தவறிவேலை கிடைத்தாலும் வயிற்றுக்குப் போதிய கூலி இல்லை. நாங்கள் பின் எப்படி உயிர் வாழ முடியும்? எங்கள் குறைகளை நாங்கள் யாரிடத்திற் சொல்லுவோம். எங்கள் குறைகளை கேட்பதற்கு, நாங்கள் வாழும் அரசாங்கத்தில் யார் இருக்கிறார்கள்? காவலன் இல்லாத நாட்டில், தங்கள் இஷ்டம்போல் வந்து சூறையாடித்திரியும் கொள்ளைக்காரர்கள் நாட்டில் நடமாடினால், அவ்வூர் மக்கள் எத்தகைய அச்சத்திற்காளாவார்களோ, அத்தகைய அச்சம் நெசவாளர்களைப் பிடித்திருக்கிறது! பஞ்சப் பிசாசும், பட்டினிப் பேயும், நெசவாளர்கள் வாழ்க்கையில் இருக்கும் சுகத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுவிட்டன! மேலும் சாதாரணமாக எங்கள் வாழ்வில் நடமாடிக்கொண்டிருக்கின்றன! எப்போது வருமோ....! யார் குடும்பத்தைக் கொள்ளையிடுமோ....! யார் யாரைக் கொலை செய்யுமோ....! எவரெவர் நாணயத்தைச் சீரழிக்குமோ....! எந்தெந்தப் பெண்ணின் கற்பைச் சூறையாடுமோ....! எத்தனையெத்தனைப் பெண்களின் தாலிகளை அறுத்துக்கொண்டு போகுமோ....! யார்யாரை வாழவிடாமல் வதைக்குமோ....! எத்தனை உத்தமர்களைத்திருடனாக்கிப் பின் கைதியாக்கி அவன் வாழ்வை கழுத்தறுக்குமோ....! எத்தனை பாலகரின் உயிரைக்குடித்து சுடுகாட்டுக் கனுப்புமோ! இன்னும் என்னென்ன அக்கிரமங்கள்செய்யுமோ! என்ற பயம்—பீதி—அச்சம் ஆகியவைகள் நெசவாளர் எல்லோருடைய உள்ளங்களிலும் உலவிக்கொண்டிருக்கின்றன! அதனால்தான், எங்கள் வாழ்வுக்கு உத்தரவாதமில்லாத-நம்பிக்கைக்கிடமில்லாத இந்நாட்டில் வாழ்வதைவிட இறப்பது மேல் என்ற முடிவுக்கு என் உள்ளம் வந்துவிட்டது. நடைப்பிணமாக வாழ்வதைக் காட்டிலும் பிணமாவது மேல்....! இதோ, என் மடியில் என் கண்மணி பாலில்லாமல் குற்றுயிராகக் கிடக்கின்றது, இன்னும் சிறிது நேரத்தில், என் உதிரத்தில் உதித்த மாணிக்கத்தின் உயிர் பிரிந்துவிடும்....! பின் எனக்கு என்னவாழ்வு வேண்டியிருக்கிறது! களவுக் குற்றம் சாட்டப்பட்[illegible]கைதியாகக் கண

வன் கூண்டிலே இருக்க, பால் வாங்கக் காசு இல்லாமல் காலனிடம் தஞ்சம் புகுந்த என் கண்மணி மடியிலே....! இந்நிலையில் நான் மட்டும் எவ்விதம் வாழ்வேன்....! எனக்கும் என் கண்மணியின் முடிவு நாளையோ பிறகோ வரும்; அதற்குள்ளாகவே நானே போய் ஒரு காட்டுக் கிணற்றைத் தேடி என்காலத்தை முடித்துக் கொள்கிறேன்....! இந்நாட்டில் வாழும் கைத்தறி நெசவாளரின் நிலை இப்படி இருக்கிறது! என் கணவரைக் கைதியாக்கியதும், என் பாலன் உயிரைக் குடித்ததும், என்னைக் கொல்லப் போவதும் பஞ்சமும் பட்டினியுந்தான்....! பஞ்சமும் பட்டினியும் நின்றால் தான் நெசவாளருக்கு வாழ்வு நிச்சயம்; இல்லையேல் எங்கள் கதி தான்! அதோ என் பாலன் என்னை அழைக்கிறான்; நான் வருகிறேன்....!

கைதி கூறுகிறான் :

என்னைப் போலீசார் பின் தொடர்ந்து துரத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கையில் அகப்படுவதைப்பற்றிக்கூட கவலையில்லை. என் கண்மணியைக் காண வேண்டும், நான் சிறை சென்றபின் என்னென்ன கொடுமைகளை என் காதலி அனுபவித்தாளோ....! எத்தனைத் துயருற்றாளோ....! என்று நினைக்கிறது எனது மனம்.

அதோ ஓர் உருவம் தெரிகிறது. ஆம். என் கண்ணகியேதான்! கையில் என்னருமைக் குழந்தையை ஏந்திநிற்கிறாள். நான் எப்படியாவது போலீசார் கையில் சிக்குவதற்கு முன் அவளை அடைந்து விடவேண்டும். பின் இறந்தாலும் இருவருமே இறக்கலாம்; அதிலேகூட ஓர் இன்பமும் அமைதியும் இருக்கத்தான் செய்யும்....!

இதோ அவளை நெருங்கி விட்டேன். என்னைப் போலீசாரும் நெருங்கிக் கொண்டேயிருக்கின்றனர். ஆ...! என்ன பயங்கரம்....! என்ன துணிவு....! என் கண்ணகி குழந்தையைக் கிணற்றில் அல்லவா எறிந்து விட்டாள்....! ஏன் அவளும் தற்கொலை முடிவிலேயே வந்திருக்கிறாளா....? ஆம்...ஆம்...! அதே முடிவுதான்! கிணற்றில் ஏறிவிட்டாள்....அதேபோது என் கைக்கும் எட்டி விட்டாள். அடடா....தற்கொலை செய்யப்போகும் போதுங்கூட என்னைக் கண்டதும் அவள் முகம் எவ்வாறு மலர்கிறது.... ஒரே ஆனந்தமாக இருக்கிறது.... அவள் தன்னை மறந்து என்மீது சாய்ந்து விட்டாள்....! இனி அவளுக்கும் எனக்கும் பயமே இல்லை...!

பத்திரிகைச் செய்தி :

சிறையை விட்டுத் தப்பி ஓடிச் சென்றகுற்றத்திற்காகக் கணவனும், குழந்தையைக் கொன்று தானும் தற்கொலை செய்ய முயன்ற குற்றத்திற்காக் மனைவியும் கைது செய்யப் பட்டார்கள். ○

சேலத்தில் நெசவாளர் தினம்.

கைத்தறி ஆடைகளையே அணிவதாக பிரதிக்ஞை.

தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் காங்கிரஸ். சேலம் நகர கிளையின் சார்பாக 1–8–52-ந் தேதி "கைத்தறி நெசவாளர் தினம்" அனுஷ்டிக்கப் பட்டது. அன்று நடந்த பொதுக்கூட்டத்திற்கு திரு. ஆர். எஸ். பெருமாள்சாமி செட்டியார் தலைமை வகித்தார். ஜி. இ. மோஹலிங்கம் நெசவாளர் தினத்தைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். வி. டி. குஞ்சு செட்டியார் தற்போதைய நெசவாளர் நிலைமையும், கைத்தறித் துணிகளை ஆதரிக்க வேண்டிய அவசியத்தைப்பற்றியும் பேசினார்கள். கீழ்கண்ட தீர்மானங்களை வரதராஜுலு பிரேரேபித்தார்.

1. கைத்தறிகளுக்கு வேஷ்டி, புடவை ரகங்களை ஒதுக்குமாறு மத்திய அரசாங்கத்தை ஸ்ரீ ராஜாஜீ அவர்கள் கோரியிருப்பதை இக்கூட்டம் வரவேற்பதோடு வேஷ்டி, புடவை ரகங்கள் முழுமையும், கைத்தறிகளின் உற்பத்திக்கே ஒதுக்கிவிடவேண்டிய நடவடிக்கைகளை, உடனடியாகச் செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

2. வெளிநாடுகளிலுள்ள நமது ஸ்தானீகர்கள் ஆங்காங்கு கைத்தறி ரகங்கள் சிலவாவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

தீர்மானங்களை ஆதரித்து கே.பி.இ.சிவராமன் அவர்கள் பேசியபோது, கைத்தறிகளின் வளர்ச்சியிலே நாட்டங்கொண்ட யாவரும், கைத்தறி ஆடைகளையே அணிந்து, நெசவாளர்களை வாழச்செய்ய வேண்டுமென்றும், நெசவாளர்களும், தாங்கள் தயாரிக்கும் ரகங்கள் நாணயமாகவும், நம்பிக்கையுள்ளதாகவும் இருக்கவேண்டுமென்றும், கைத்தறி ரகங்களின் தரம் குறைந்துள்ள காரணத்தால்தான் பொதுமக்களுக்கு இன்றுமில் ஜவுளியின்மீது மோகம் ஏற்பட்டுள்ளது என்றும், நமது துணிகள் நாணயமுள்ளதுதான் என்பதை பொதுமக்கள் உணரும்படிச்செய்வதற்கும், அவர்களிடையே கைத்தறித் துணிகளின் பெருமையை உணர்த்தவும், ஆண்டுதோறும் கொண்டாடிவரும் இந்த நெசவாளர் தினத்தை "நெசவாளர் வாரமாக" அனுஷ்டித்து ஆங்காங்கு பிரசாரங்கள் செய்ய நெசவாளர் சங்கங்கள் முயர்ச்சிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார். தீர்மானங்கள் பலத்த ஆரவாரங்களுக் கிடையே நிறைவேற்றப்பட்டபின் காரியதரிசி வந்தனோபசாரங்கூற கூட்டம் இனிது முடிந்தது.

சிறுவலூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி,
விற்பனைச் சங்கம் லிமிடெட், No. K. 1116

(பெருந்துரை வழி) சிறுவலூர் P. O. (கோவை ஜில்லா)

எங்கள் சொஸைட்டியில் 20, 26, 30, 40, நெ. நூல்களிலில் 4 x 8, 4 x 9 வேஷ்டித்தான்களும், 50" x 12 கெஜம் காடா பீஸ்களும், 6, 7½, 8, கெஜங்களில் பேட்டு, கோர்வை, பீனை கியாரண்டிக் கலர் சேலைத்தினுசுகளும், 2/8 2/30 நெ. நூலில் கெட்டி எடை நெசவு துப்பட்டிகளும் மிகஅழுத்தமான நெசவில் தயார் செய்துவருகிறோம்.

தற்சமயம் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன! தேவைக்கு எழுதுங்கள்.

சி. தாண்டவஞ் செட்டியார், தலைவர்

தென் இந்தியாவின்
முதல் ஸ்தாபனம்

தி செளத் இந்தியன் பிரிண்டிங் & டையிங் பாக்டரி

★

கண்ணைக் கவரும் கணக்கற்ற புத்தம் புதிய டிசைன்களில் அற்புதமான சீட்டி, சேலை தினுசுகள் மில் & கைத்தறித் துணிகளில் கியாரண்டி கலர்களில் மெஷின் பிரிண்ட் செய்தும் காலண்டர் செய்தும் குறித்தநாளில் தருகிறோம்.

★

எங்களின் சொந்த தயாரிப்பான "டார்ச் பேபரிக்ஸ்"
இந்திய ஜவுளி மார்க்கெட்டில் மிகப் பிரசித்த மானது.

விவரங்களுக்கு:—

காமதேனு டெக்ஸ்டைல்ஸ்

ஈஸ்வரன் கோவில் தெரு : : ஈரோடு. S. I.

ஸ்ரீவில்லிபுத்தூர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச்
சங்கம் லிமிடெட்; No. A. 1601, ஸ்ரீவில்லிபுத்தூர்.

எங்களிடம் 20s x 26s நூலில் தயாரித்த 30" x 16 கெஜம், 50" x 12 கெஜம் காடா பீசுகளும், 4 x 8 வேஷ்டி மடிகளும், 36s x 40s நூலில் தயாரித்த 2 x 8 வேஷ்டி ஜோடிகளும், 50" x 12 கெஜம் பீசுகளும், 45" x 7 கெஜம் பல கலர்களில் பட்டுப்பேட்டுப் போட்ட சேலைகளும் ஏராளமாக எப்பொழுதும் கிடைக்கும்.

தற்சமயம் விலைகள் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன.

தேவைக்கு எழுதுங்கள்! முன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாம்

A. K. ஞானியார், செயலாளர். பெ. குருசாமி, தலைவர்

Edited & Published by: M. K. Swamy at 19/22, Muthanankulam Street, Coimbatore.